பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 சித்திரை 18 வெள்ளிக்கிழமை 01.05.2020 கதிர் 177

## 663 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே.01

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 14 பேர் நேற்று வியாழக்கிழமை அடையாளம்

பக்கம் 04

## வவுனியா கடற்படைச் சிப்பாயின் உறவினர்கள் 9 பேரிடம் சோதனை

வவுனியா, மே.01

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வவுனியா மகாகச்சகொடியைச் சேர்ந்த 9 பேரிடம் நேற்று மாலை பி.சி.ஆர் பரிசோதனைக்காக மாதிரி பெறப்பட்டது.

வெலிசறை கடற்படை முகாமில் பணியாற்றிய வவுனியாவைச் சேர்ந்த சிப்பாய்க்கு கொரோனோ தொற்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்நிலையில் வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்குக் கடற்படை உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள் என 216 பேர் பஸ்களின் மூலம் நேற்று முன்தினம் கொண்டு

பக்கம் 04

## மணிவண்ணனிடம் ரி.ஐ.டி.விசாரணை!

யாழ்ப்பாணம், மே.01

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனிடம் பங்கரவாத விசாரணைப் பிரிவினர் நேற்று வியாழக்கிழமை விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

பங்கரவாத விசாரணைப் பிரிவினர் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட அந்தப் பிரிவின் விசாரணை அதிகாரிகள் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியிலுள்ள மணிவண்ணனின் இல்லத்துக்கு நேற்றுக் காலை நேரில் சென்றுள்ளனர்.

பக்கம் 04

## இனி இது ரகசியம் அல்ல!

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல் இப்பத்தியைத் தொடர்ந்து எழுதி வருகிறேன். ஒரு நாள் கூட தவற விட்டமை கிடையாது.

இதற்கென ஒரு வாசக நண்பர்கள் கூட்டம் உண்டு. தவறாமல் வாசிப்பவர்கள், விமர்சிப்பவர்கள், பாராட்டுபவர்கள், திட்டுபவர்கள், தவறுகளை உடனுக்குடன் சுட்டிக்காட்டுபவர்கள்...

பக்கம் 02

# மூன்று மாதங்கள் விடுமுறை கோருகிறார் வடக்கு ஆளுநர்!

## பதில் ஆளுநர் நியமிக்கப்பட வாய்ப்பு




யாழ்ப்பாணம், மே.01

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம். சார்ள்ஸ், மூன்று மாத மருத்துவ விடுமுறை கோரியுள்ளார் என்று அறிய முடிகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இந்த அனுமதியை அவர் கோரியுள்ளார்.

இன்று மே முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு அவர் இந்த விடுமுறையைக் கோரியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

பக்கம் 04

## பிரதமரின் கூட்டத்தை எதிரணி நிராகரிக்கும்?

கலைக்கப்பட்ட நாடாளுமன்றின் உறுப்பினர்கள் அனைவருக்கமாக எதிர்வரும் திங்கள் என்று தனது அலரி மாளிகை அலுவலகத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒழுங்குபடுத்தியிருக்கும் கூட்டத்தை பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து புறக்கணிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்றுக் கொழும்பில் கூடி இந்தக் கூட்டம் குறித்து ஆராய்ந்தனர்.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும்படி கேட்டு எதிர்க்கட்சிகள் அனுப்பி வைத்த கடிதத்தின் கோரிக்கையை ஒட்டு மொத்தமாக நிராகரித்து

பக்கம்04

## முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மே.01

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 7 பேர் நேற்று (ஏப்ரல் 30) வியாழக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அவர்களில் ஒருவர் முழங்காவில் தனிமைப்படுத்தல் நிலையத்தில்

பக்கம் 04

## குடாநாட்டில் பாண் விலை 3 ரூபா உயரும்

யாழ்ப்பாணம், மே.01

யாழ். மாவட்டத்தில் 450 கிராம் எடைகொண்ட பாண் ஒன்றின் விலையை 3 ரூபாயால் அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் அதிகரிப்பதற்கு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கோதுமை மாவுக்கு பிறிமா நிறுவனத்தால் வழங்கப்பட்ட 3 ரூபா விலைக்கழிவு இடைநிறுத்தப்பட்ட

பக்கம் 04

## நாடாளுமன்றத்தை கூட்டவே மாட்டேன்

### எதிர்க்கட்சிகளுக்கு கடிதம் மூலம் அறிவித்தார் ஜனாதிபதி கோட்டா

கொழும்பு,மே.01

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக்கூட்டவே மாட்டேன் என எதிர்க்கட்சியிலுள்ள தலைவர்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டவேண்டுமென வலியுறுத்தி எதிர்க்கட்சிகள்

பக்கம் 04

## பருத்தித்துறையில் ஹாட்லியை பொலிஸாருக்கு வழங்க எதிர்ப்பு

யாழ்ப்பாணம்,மே.01

வடக்கு மாகாணத்தில் படையினர் தங்குவதற்காக பாடசாலைகள் பல பொறுப்பேற்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரும் சில பாடசாலைகளைக் கோரியிருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பக்கம்04

## அதிக விலையில் பொருள்கள் விற்றால் கடும் நடவடிக்கை!

### யாழ். அரச அதிபர் அறிவிப்பு



யாழ்ப்பாணம்,மே.01

தற்போது யாழ்ப்பாண குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் தளத்தப்பட்டுள்ள நிலையில் மக்கள் தமது அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றார்கள். இந்த நிலையில் வர்த்தகர்கள்

பக்கம் 04

## மாணவனைக் காணவில்லை; பளை பொலிஸில் முறையீடு

கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளை முள்ளியடியில் வசித்துவந்த அனோஜ் என்ற மாணவனை காணவில்லை என்று பளை பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த நான்கு தினங்களுக்கு முன் வீட்டிலிருந்து புறப்பட்ட அவரைக் காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

அவர் பளை தர்மக்கேணி அ.த.க பாடசாலையில் கல்வி பயின்று க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு முடிவுக்காகக் காத்திருந்தவர் என்று குடும்பத்தார் தெரிவித்துள்ளனர்.

பரீட்சை முடிவுகள் வெளியாகிய நிலையில் அவர் காணாமற் போயுள்ளமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

## ஊரடங்குக்கு சட்டமா அதிபர் முழு ஒப்புதல்

கொழும்பு, மே.01

நாட்டில் கோவிட் -19 தொற்று நோயைக் கட்டுப்படுத்த பொலிஸாரால் நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவு மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்.

பதில்

பக்கம் 04

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பலர்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு சுவாரசியமான விவகாரத்தைத் தேடி எடுப்பது என்பது முயல்கொம்பு தேடுவது போல. இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா போன்ற நாடுகளுக்குப் பயணம் செய்து கொண்டும், அங்கிருந்தபடியும் கூட இந்தப் பத்தியை தவறாது ஏதோ எழுதி நிரப்பியிருக்கிறேன்.

இப்போது கடந்த இரண்டு, மூன்று நாள்களாக இந்தப் பத்திக்கு விடயம் எழுதுவதற்கு கொழும்புத் தமிழ் ஊடகவியலாளர் கருப்பொருள் தந்து கொண்டிருக்கின்றார்.

அதற்கும், தொடர்ந்து இன்றும் அவர் விடயதானம் தந்திருக்கின்றமைக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு விவகாரத்துக்குள் இறங்கலாம் என நினைக்கிறேன்.

முதலில் ஒரு குட்டி 'பிளாஷ் பாக்'.

சித்திரை வருடப் பிறப்பன்று கைது செய்யப்பட்ட ரஞ்சன் ராமநாயக்காவின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணைமனு மீது 20ஆம் திகதி நுகேகொடை நீதிமன்றத்தில் விசாரணை. ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் ஆஜராகிப் பிணை கோரி வாதிடுகின்றார்.

அந்த வாதத்தின் நடுவில் நாட்டில் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் ஊரடங்கு சட்டரீதியானது அல்ல என்று கூறி பல வாதங்களை சமர்ப்பணம் செய்கின்றார் சுமந்திரன்.

அவற்றில் பல சுவையான அம்சங்கள் பொதிந்து கிடந்தமையால் அவற்றை எனது வாசகர்களுக்கு இப்பத்தியில் நான் விவரித்தேன்.

ரஞ்சன் ராமநாயக்காவுக்குப் பிணை கிடைத்தமை பற்றிக் குறிப்பிட்டேன். ஆனால் ஊரடங்கு தவறு என்று சுமந்திரன் நடத்திய வாதத்தின் அடிப்படையில் அந்தப் பிணை வழங்கப்பட்டது என்று நான் குறிப்பிடவுமில்லை. சுமந்திரன் கூறவுமில்லை. அது எமது வாசகர்களுக்கும் தெரியும்.

அப்படி இருக்க மேற்படி பத்திரிகையாளர் எனது பத்தியை நேரடியாகக் குறிப்பிடாமல் தமது முகப் புத்தகத்தில் ஏதேதோ புசத்தியிருந்தார்.

வேலிக்கு ஓணான் சாட்சி என்பது போல தமது எழுத்துக்கு சட்டத்தரணி காண்டீபனைக் கூட அவர் ஆதாரத்துக்கு இழுத்தார்.

*'ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் சில ஊடகங்களும்'* என்ற தலைப்பிலான அவரது அந்தப் பதிவில் பின்வரும் விடயங்கள் இருந்தன:–

*"...... ஆனால் சில தமிழ் ஊடகங்கள் ஊரடங்குச் சட்டம் தவறானது எனச் சுமந்திரன் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டி வாதாடியதால் ரஞ்சன் ராமநாயக்காவுக்குப் பிணை வழங்கப்பட்டதாகச் செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்தச் செய்திகள் குறித்து என்னுடன் தொடர்பு கொண்ட சட்டத்தரணி காண்டீபன், இப்படிச் செய்தி எழுதிய செய்தியாளர்களுக்கு அறிவேயில்லையா என்று கேள்வி எழுப்பினார்."*

*"......, ஆனால் சில தமிழ் ஊடகங்கள் இந்தச் செய்தியைப் புரியாமல் எழுதினார்களா? அல்லது சுமந்திரனை ஒரு கீரோவாகக் காண்பிக்க எழுதினார்களா என்றும் காண்டீபன் என்னிடம் கேட்டார். அப்படி கீரோவாகக் காண்பிப்பதற்காக இப்படிச் செய்திகள் எழுதப்பட்டிருந்தால், செய்தியாளர்களுக்கும் பிரதம ஆசிரியர்களுக்கும் கொஞ்சம் கூடச் சட்ட அறிவு இல்லை என்றுதானே அர்த்தம்?"*

*"....சுமந்திரனைத் தூக்கிப் பிடிப்பதற்காகத் தங்கள் சுயமரியாதையையும், ஊடக ஆளுமையையும் இழந்து இவ்வாறான, தவறான செய்திகளை சில ஊடகங்கள் வெளியிடப்பட்டிருப்பதாகச் சட்டத்தரணி காண்டீபன் என்னிடம் சுட்டிக்காட்டினார்...."*

அதற்குப் பின்னர் கடந்த 29ஆம் திகதி பொலிஸார் நகர்த்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தமை குறித்தும் –

அதனடிப்படையில் அன்று நடந்த நீதிமன்ற விசாரணை குறித்து மேற்படி பத்திரிகையாளர் பதிவிட்ட விடயங்களையும் –

உண்மையில் நீதிமன்றத்தில் என்ன நடந்தது என்பது தொடர்பில் சுமந்திரன் கூறிய கருத்துக்களையும்

– நேற்று இப்பத்தியில் விரிவாக விவரித்திருந்தேன்.

– இதுதான் 'பிளாஷ் பாக்'.

இனி, இன்றைய விடயத்துக்கு வருவோம்.

நேற்று முழு நாளும் சுமந்திரனோடு தொடர்பு கொள்ள எனக்கு வாய்ப்புக் கிட்டவில்லை.

இந்த நிலையில் எனது மற்றொரு பத்திரிகை நண்பர் தாமே அழைப்பு எடுத்தார்.

*"உங்கள் இன்றைய (நேற்றைய) பத்தி எழுத்தை அடுத்து அந்தப் பத்திரிகையாளர் பதறியடித்துக் காலையிலேயே சுமந்திரனுக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து விட்டார். சரணாகதிதான்"* – என்றார்.

*"அப்படியா?. மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு – வரும்தானே!"* – என்றேன் நான்.

வேறு சில வட்டாரங்கள் மூலமும் இந்த சரணாகதிப் படலம் குறித்து அறிந்து கொண்டேன்.

அஞ்சுவது அஞ்சாமை பேதமை. அத்தோடு வழக்கு விடயங்களோடு – அதுவும் சுமந்திரன் போன்ற ஜனாதிபதி சட்டத்தரணியோடு – வலிமையான தளத்தில் இல்லாமல் நீதிமன்ற விசாரணை பற்றிய செய்திகளில் சும்மா நொட்டுவது மிக மிக ஆபத்தானது. சிக்கலானது. அதன் தாற்பரியம் புரிந்து கொண்டார் போலும். சாட்சிக்காரன் காலில் வீழ்வதிலும் பார்க்க சண்டைக்காரன் காலில் வீழ்வது மேல் என்று எண்ணி சுமந்திரனுடன் 'சமாளிபிகேஷன்' படலம் ஆரம்பித்து விட்டது போலும் என்று எண்ணிக் கொண்டேன்.

இதற்கு மேல் இதனைத் தொடராமல் விட்டு விடலாம் என்று நினைத்தேன்.

ஆனால் நேற்றிரவு சம்பந்தப்பட்ட பத்திரிகையாளர் தமது முகப்புத்தகத்தில் வெளியிட்ட பதிலை பார்த்ததும் இதில் விலகிப்போவது அர்த்தமற்றது என்று தோன்றியது.

## நேற்றைய பதிவு

*'ரஞ்சன் ராமநாயக்கா பிணை விவகாரம் – ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் எனக்குத் தொலைபேசியில் கூறிய விடயம்'* என்ற தலைப்பில் தமது நேற்றைய பதிவில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

*"......ஆனால், எனது முகநூல் பதிவு தொடர்பாக குறிப்பிட்ட ஒரு பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் விமர்சனங்களைச் செய்துள்ளார். இதனால் சட்டத்தரணி சுமந்திரனிடம் நான் இன்று காலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டேன்.*

*"எனக்கு விளக்கமளித்த சட்டத்தரணி சுமந்திரன்–*

*"........உங்கள் பதிவில் குறிப்பிடப்பட்டிருந்தமை போன்று ஊரடங்குச் சட்டம் தவறானது என்ற அடிப்படையில் ரஞ்சன் ராமநாயக்காவுக்குப் பிணை வழங்கப்பட்டதாக வெளியான நாளேடுகள், இணையச் செய்திகள் எதனையும் அஜித் ரோகன நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் ஏதோ பெரிய பத்திரிகைக் கட்டுகளைத் தூக்கி வந்து தனது மேசையில் அவர் வைத்திருந்தாகவும் சுமந்திரன் கூறினார்.*

*"......அத்துடன் தான் சமர்ப்பித்த நகர்த்தல் பத்திரத்தை அஜித் ரோகன வாபஸ் பெற்றதாகவும் கூறினார். எனவே இந்த இரு விடயங்களும் உங்கள் பதிவில் இல்லை என்று சட்டத்தரணி சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.*

*"......ஆகவே சட்டத்தரணி சுமந்திரனோடு உரையாடியதன்படி நாளேடுகளையும், இணையச் செய்திகளையும் அஜித் ரோகன மன்றில் சமர்ப்பிக்கவில்லை என்பதையும், தான் சமர்ப்பித்த நகர்த்தல் பத்திரத்தை வாபஸ் பெற்றுக் கொண்டமை தொடர்பாகவும் ஊடக ஒழுக்கத்தின் அடிப்படையில் எனது பதிவில் தற்போது இணைத்துள்ளேன்.*

*"இந்த விடயம் தொடர்பாக நான் எழுதிய இரண்டு பதிவுகளில், முதல் பதிவைத் தான் வாசிக்கவில்லை எனவும் இரண்டாவது பதிவையே வாசித்ததாகவும் சுமந்திரன் கூறினார்."*

– இப்படித்தான் நேற்றிரவு தனது பதிவை முடித்திருக்கின்றார் கற்றறிந்த அந்தப் பத்திரிகையாளர்.

அவர் குறிப்பிடும் ஊடக ஒழுக்கத்தின்படி –

அவர் முன்னர் வெளியிட்ட பதிவுகளில் ஆக இரண்டே இரண்டு விடயங்களைத் தான் அவர் தொலைபேசி எடுத்து சுமந்திரனுடன் உரையாடியபோது சுமந்திரன் – சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அதாவது நாளேடுகள், இணைத்தளச் செய்திகள் அடங்கிய ஆதாரங்களை நீதிமன்றத்தில் பொலிஸ் அதிகாரி அஜித் ரோஹண சமர்ப்பித்தார் என்று எழுதியமையும் –

அந்த நகர்த்தல் பத்திரத்தை அஜித் ரோஹணவே வாபஸ் பெற்றார் என்பதை எழுதாமல் விட்டமையும் –

மட்டும்தான் அந்தப் பத்திரிகையாளர் தமது பதவில் விட்ட தவறாக சுமந்திரன் சுட்டிக்காட்டினார் என அவர் நேற்றைய முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

## என் கேள்விகள்

அப்படியானால் என்னிடம் சில கேள்விகள் இருக்கின்றன. அவற்றுக்கு அந்தப் பத்திரிகையாளர் தமது முகப்புத்தகம் மூலமோ, அல்லது எமது பத்திரிகை மூலமோ (அவரது முழு விளக்கத்தையும் அடித்தல் திருத்தலின்றி பிரசுரிக்கத் தயாராக இருக்கின்றோம். அத்தகைய ஊடக தர்மப் பாசறையில் வளர்ந்தவன் நான்) பதிலை விளக்கலாம். அல்லது சுமந்திரனே பதில் – விளக்கம் – விவரம் – தாராலாம்.

இனி அந்தக் கேள்விகளுக்கு வருகிறேன். நேற்றுமுன்தினம் அந்தப் பத்திரிகையாளர் தமது முகப்புத்தகத்தில் இவ்விடயத்தை –

*"ரஞ்சன் ராமநாயக்கா – பிணை விவகாரம் –நீதிமன்றத்தில் சுமந்திரன் சரணடைந்தார்."*என்ற தலைப்பில் தான் வரைந்திருந்தார்.

அதில் அவர் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்டினார்:–

*"....பொலிஸாரின் இந்த நகர்த்தல் பத்திரம் தொடர்பாகவே சுமந்திரன் இன்று அழைக்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டார்.*

*"....விளக்கம் முடிவடைந்து நீதிமன்றத்திற்கு வெளியே வந்த சுமந்திரன் ஊடகவியலாளர்களிடம் ரஞ்சன் ராமநாயக்காவுக்குப் பிணை வழங்கப்பட்ட வழக்கில், ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை தவறு என்பது தொடர்பாக நீதிமன்றத்தில் தான் எதுவுமே பேசவில்லை என்று சொன்னார்.*

*"அத்துடன் தான் கூறியதாக அச்சு ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், நீதிவான் முன்னிலையில் சுட்டிக்காட்டியதாகவும் சுமந்திரன் பதட்டமான குரலில் கூறுகிறார்.*

*"ஆகவே ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை சட்டரீதியானதல்ல என்ற தனது வாதத்தினாலேயே ரஞ்சன் ராமநாயக்காவுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியதென ஊடகங்களுக்குப் பொய்யான தகவலை சுமந்திரன் வழங்கியிருக்கிறார் என்பது இங்கே நிரூபிக்கப்படுகின்றது.*

*"ரஞ்சன் ராமநாயக்காவுக்குப் பிணை வழங்கப்பட்ட விடயத்தைச் சுமந்திரன் தவறாகத் திசை திருப்பி மக்களையும் தவறாக வழிநடத்தியுள்ளாரென்றே பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்த தமது நகர்த்தல் பத்திரத்தில் குற்றம் சுமத்தியிருந்தனர்.*

*"எனவே நீதிமன்ற அவமதிப்பு என்று குற்றம் சுமத்திச் சுமந்திரன் மீது பொலிஸார் அல்லது பொதுமகன் ஒருவர் வழக்குத் தொடர முடியும்.*

*"பொலிஸாரின் அனுமதிக் கடிதம் இன்றி ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போது ரஞ்சன் ராமநாயக்கா வெளியே நடமாடினார் என்றும் பொலிஸாரின் கடமைகளுக்குத் தடைகள் ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலுமே ரஞ்சன் ராமநாயக்கா கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஏழு நாட்களின் பின்னர் பிணையில் விடுக்கப்பட்டார்."*

சரி இனி எனது கேள்விகளுக்கு வருவோம்.

மேற்படி பத்திரிகையாளரின் நேற்று முன்தினம் பதிவில் இப்படி எல்லாம் இருக்க, அவரின் ஊடக ஒழுக்கத்தின்படி குறிப்பிடத்தக்கதாக இரண்டே இரண்டு விடயங்களை மட்டும்தான் சுமந்திரன் அவரிடம் நேற்றுக் காலை மறுத்துச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதாவது அஜித் ரோஹண ஆவணங்கள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. அவரே நகர்த்தல் பத்திரத்தை வாபஸ் பெற்றார் என்பவை மட்டும்தானா?

அப்படியானால் –

"நீதிமன்றத்தில் சுமந்திரன் சரணடைந்தார்."

"சுமந்திரன் நீதிமன்றுக்கு அழைத்து விளக்கம் கேட்கப்பட்டார்."

"ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டமை தவறு என்று நீதிமன்றத்தில் தான் எதுவுமே பேசவில்லை என்று (சுமந்திரன்) கூறினார்."

"சுமந்திரன் பதட்டமான குரலில் குறிப்பிட்டார்."

"ஊடகங்களுக்குப் பொய்யான தகவல்களை சுமந்திரன் வழங்கியிருக்கின்றார் என்று இங்கு நிரூபிக்கப்படுகின்றது"

"விடயத்தை சுமந்திரன் தவறாகத் திசை திருப்பி மக்களையும் தவறாக வழிநடத்தியுள்ளார் என்று நகர்த்தல் பத்திரத்தில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது."

"எனவே நீதிமன்ற அவமதிப்பு என்று குற்றம் சுமத்திச் சுமந்திரன் மீது பொலிஸார் அல்லது பொதுமகன் வழக்குத் தொடர முடியும்"

"ஊரடங்கச் சட்டம் அமுலில் இருந்த போது ரஞ்சன் ராமநாயக்கா வெளியில் நடமாடினார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளது."

– இந்த விடயங்களை எல்லாம் இந்தத் தொலைபேசி அழைப்பில் சுமந்திரன் ஒப்புக் கொண்டார். மறுக்கவில்லையா?

பத்திரிகையாளர் குறிப்பிடும் ஊடக ஒழுக்கத்தின்படி இந்த விடயங்கள் சுமந்திரனால் மறுக்கப்படவில்லை. அல்லது விளக்கமளிக்கப்பட்டு திருத்தபடவில்லை. அதனால்தான் அவரது ஊடக ஒழுக்கத்தின் படி அந்த மறுப்புகள், அல்லது திருத்தங்கள் பிந்திய பதிவில் வரவில்லை. திருத்தப்பட்ட இரண்டு விடயங்கள் மட்டும் அவரால் விவரிக்கப்பட்டுள்ளன.

அதுதான் நிலைமை என்றால் எனக்கு ஒரு சந்தேகம் பிறக்கின்றது.

ரஞ்சன் ராமநாயக்கா விடயத்தில் அந்தப் பத்திரிகையாளர் குறிப்பிட்டமை போல நீதிமன்றத்தில் சுமந்திரன் சரணடைந்தார் என்ற தகவல் உண்மையோ, பொய்யோ, ஆனால் அவற்றை அந்தப் பத்திரிகையாளருடன் நடந்த தொலைபேசி உரையாடலில் மறுக்கவும், திருத்தவும், உண்மையை உஷாராக வெளிப்படுத்தவும் சுமந்திரன் தவறியிருப்பாரானால் உண்மையில் சுமந்திரன் அந்தப் பத்திரிகையாளரிடம் சரணடைந்தார் என்பதுதான் அர்த்தம். அப்படி நடந்திருக்காது என்று நம்புகிறோம். உண்மையைத் தெளிவுபடுத்துவாரா சுமந்திரன்? அல்லது சரணாகதி நாடகம் எந்தத் திசையில் நடந்தது என்பதை அந்தப் பத்திரிகையாளராவது தெளிவுபடுத்துவாரா?

–மின்னல்–

# கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை

## எதிர்கட்சிகளுக்கு அசாத் சாலி தெரிவிப்பு!



**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பையேற்று, எதிர்க்கட்சிகள் அந்தக் கூட்டத்தில் பங்கேற்பதில் எந்தவிதமான அர்த்தமும் இல்லையெனவும், நாடாளுமன்றத்தை ஒருபோதும் மீண்டும் கூட்டப்போவதில்லை என அவர்கள் அறிவித்த பின்னர், அந்தக் கலந்துரையாடலில் பங்கேற்பதில் பயன் ஏற்படப்போவதில்லை எனவும் முன்னாள் ஆளுநரும் தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவருமான அசாத் சாலி தெரிவித்தார்.**
**அவர் மேலும் கூறியவை வருமாறு:-**

எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ள – கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான – கூட்டத்துக்கான ஆயத்தங்களின் போது, பொதுஜன பெரமுனவினர் தமக்கு வசதியான அத்தனை இனவாத ஊடகங்களையும் வரவழைத்து, எதிர்க்கட்சியினரின் உரைகளை பதிவு செய்து, மக்கள் மத்தியில் ஒரு பிழையான அர்த்தத்தையே பரப்ப முயற்சிப்பர். வெறுமனே இந்தக் கூட்டம் ஒரு நாடக பாணியிலேயே அமையப் போகின்றது. எனவே, எதிர்க்கட்சிகள் காலத்தைக் கடத்திக்கொண்டிருக்காமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

52 நாள் சட்டவிரோத அரசாங்கத்தின் போது, அவர்கள் சார்ந்த சிரேஷ்டமான ஜனாதிபதி சட்டத்தரணி ஒருவர், நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்தமை மிகவும் சரியானதென அறுதியிட்டுச் சொன்னார். இறுதியில் நீதி உயிர்வாழ்ந்ததினால் ஜனநாயகம் மீண்டும் காப்பாற்றப்பட்டு, நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்பட்டது. ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் பிரதமராக செயற்பட வழி வகுக்கப்பட்டது.

தற்போது கொரோனா வைரஸ் ஒவ்வொருவரினதும் வீட்டுவாசலை தட்டிக்கொண்டிருக்கிறது. மக்கள் அச்சத்தில் உறைந்துகிடக்கின்றனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதனால் முறையான திட்டங்களை அமுல்படுத்த முடியாதும், திறைசேரியில் போதியளவு நிதிகளைப் பெறமுடியாதும் துரதிஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது. 19 வது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு உட்பட எந்தவொரு அமைச்சையும் அரசமைப்பின்படி, அவரால் வைத்திருக்க முடியாது. இந்த நிலையில் ஜனாதிபதி மிகவும் அனுபவம் வாய்ந்தவரெனவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்து திறம்படப் பணியாற்றியவர் எனவும் அரசாங்க முக்கியஸ்தர்கள் கூறி வருகின்றனர்.

ஜூன் 02ஆம் திகதிக்குள் புதிய பாராளுமன்றத்தை கூட்டாவிட்டால் எந்தவிதமான நிதிகளையும் ஜனாதிபதியினால் பெற்றுக்கொள்ள முடியாது. இதுவே யதார்த்தம். எனினும், தற்போதைய சூழ்நிலையில் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அவசரப்படுகின்றது. விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, மஹிந்தானந்த போன்ற ஆளுங்கட்சியின் வாய்ச்சவடால் வீரர்கள் ஊடகங்களில் வந்து, கொரோனா பாதிப்புப் பற்றி எந்தவிதமான கவலையும் இல்லாமல் தேர்தலைப் பற்றியே பிதற்றுகின்றனர்.

எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் நாட்டின் அச்சமான, துன்பமான சூழலைக் கருத்திற்கொண்டு, மனிதாபிமான ரீதியில் சிந்திக்கின்றனர். மக்களை ஆபத்தில் தள்ள அவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை. கொரோனாவை ஒழிக்கும் வரை தேர்தல் நடத்த முடியாத சூழலிலேயே, அவர்கள் நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளமையுடன், நாட்டு நலனுக்காக இணைந்து செயற்படவும் தயாரென அறிவித்துள்ளனர்.

எனினும், அரசாங்கம் அடம்பிடிக்கின்றது. ஏப்ரல் 19ஆம் திகதிக்கிடையில் கொரோனா முடிவுக்கு வருமென கூறிய சுகாதார அமைச்சர், இப்போது மௌனமாக இருக்கின்றார். கடந்த நாடாளுமன்ற சபை அமர்வின் போது, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கொரோனா ஆபத்து பற்றி உரையாற்றிய போது, சுகாதார அமைச்சர் பவித்ரா அவரின் உரையை மலினப்படுத்தினார். முககமூடிகளும் தேவை இல்லை. எதுவும் தேவை இல்லை. நாட்டிற்குள் கொரோனாவை நுழைய அனுமதிக்கமாட்டோம். எனினும், நாங்கள் சுற்றுலாத் துறைக்கு இடமளிப்போம் எனக் கூறினார். இன்று நடந்திருப்பது என்ன? – இவ்வாறு அவர் கேள்வியெழுப்பினார்.

## எரிபொருள்கள் இறக்குமதியை நிறுத்திக் கொண்டது இலங்கை

எரிபொருள்கள் இறக்குமதி செய்வதை இலங்கை அரசாங்கம் இடைநிறுத்திக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு மாத காலத்திற்கு எரிபொருள்கள் கையிருப்பில் உள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன களஞ்சிய நிறுவனத்தின் தலைவர் உவைஸ் மொஹமட் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக தற்பொழுது கையிருப்பில் உள்ள எரிபொருள்கள் பயன்படுத்தப்படுவதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நாள் தோறும் எரிபொருள் பயன்பாடு காரணமாக ஏற்கனவே எரிபொருள் கொள்வனவு செய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பின்னர், எரிபொருளுக்கு கிராக்கி இல்லாத காரணத்தினால் எரிபொருள் கொள்வனவு இடைநிறுத்தப் பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் பயன்பாடு 40 முதல் 50 வீதம் வரையில் வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

## வங்கிக் கிளையை மூட அறிவுறுத்தல்

கொரோனா வைரஸ் தொற்று அபாயம் காரணமாக, கொமர்ஷல் வங்கியின் ஹட்டன் கிளையைத் தற்காலிகமாக மூடுமாறு, அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக, ஹட்டன் டிக்கோயா நகரசபையின் தலைவர் எஸ்.பாலச்சந்திரன் தெரிவித்தார்.

இந்தக் கிளையில் பணிபுரியும் அவிசாவளையைச் சேர்ந்த ஊழியர் ஒருவரின் உறவினர், கடற்படை முகமைச் சேர்ந்தவர் என்றும் அவருக்கு கொரோனா தொற்று இருக்கலாம் என்ற சந்தேகம் நிலவுவதுடன் குறித்த நபர், மேற்படி வங்கி ஊழியருடன் தொடர்பை பேணியுள்ளார் என்று கிடைத்த தகவலுக்கு அமையவே, மேற்படி வங்கிக் கிளையை, தற்காலிகமாக மூடுமாறு அறிவுறுத்தியதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஹட்டன் நகரில், முகக் கவசம் அணியாமல் சேவையில் ஈடுபடும் நடமாடும் வியாபாரிக்ள உள்ளடங்களாக அனைத்து வியாபாரிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

**வீட்டுத்தோட்ட விதைகள் விற்பனைக்கு**
வீட்டுத்தோட்டத்திற்கு தேவையான விதைகள் விற்பனைக்கு உண்டு.
வெண்டி, பயிற்றை, கத்தரி, கீரை, தக்காளி, பாகல், மிளகாய், சோளம், பூசணி, முள்ளங்கி, பீற்றூட், புடோல், கறிமிளகாய், சிறகவரை.
(வீடுகளிற்கும் விநியோகிக்கப்படும்.)
தொடர்புகளுக்கு: 077 411 4422




காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு
விளம்பரம் (8cm x 5cm) பிரசுரிக்க!
கருப்பு வெள்ளை – ரூபாய் 500/-
முழு வர்ணம் – ரூபாய் 1000/-
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

**வேலைவாய்ப்பு – இரவுக் காவலாளி**
யாழ். நகரப்பகுதியில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு இரவுக்காவலாளி ஒருவர் தேவை. முழுநேரமாக தங்கிநின்று வேலைசெய்தால் உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 307 8799

**புழுக்கொடியல் விற்பனைக்கு.**
சுத்தமான சுகாதாரமான முறையில் பொதியிடப்பட்ட புழுக்கொடியல் 1/2kg, 1/4kg பைக்கற்றுகளில் விற்பனைக்கு உண்டு. தேவைப்படின் வீடுகளுக்கும் விநியோகம் செய்யப்படும். (மேலதிக கட்டணத்துடன்)
தொடர்புகளுக்கு: 076 100 5277

**தோட்டக்காணி தேவை**
மரக்கறித் தோட்டம் செய்யக்கூடிய வளமான செம்மண் உள்ள காணி குத்தகைக்குத் தேவை. இரசாயன உரங்கள், கிருமிநாசினிகள் ஆகியவை பாவிக்காத காணி விரும்பத்தக்கது.
உரிய முறையில் பராமரித்து குத்தகை முடிவில் நல்ல நிலையில் திருப்பிக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 078 284 5000

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## இன்று மே தினம்

மேதினியின் மேன்மக்கள் உழைப்பாளிகள். அவர்களின் உயர்வை – உன்னதத்தை – போற்றும் நாள் இது.

*“உழைக்கும் தொழிலாளர்களே! ஒன்றுபடுவோம் வாருங்கள்!”* – என்பதே மேதினம் தந்து நிற்கும் அறை கூவலாகும்.

நூற்றாண்டுகளாய் இந்தக் கோஷத்தைப் பின்பற்றி நின்று, ஆண்டு தோறும் எழுச்சியாகக் கொண்டாடப்பட்ட மேதினம் இந்தத் தடவை அடங்கிப் போய்க் கிடக்கின்றது.

உழைக்கும் வர்க்கம் – தொழிலாளர்கள் – தமது ஐக்கியத்தை உலகுக்கு உரத்து ஒலித்துக் காட்டுவதற்காக மேதினப் பேரணிகளில் ஒன்று திரள்வர்.

அதற்கு மாறாக இம்முறை வீடுகளுக்குள் முடங்கிக் கிடக்கும் துர்ப்பாக்கிய நிலைமை.

முடங்கி மாத்திரமல்ல, உணவுக்கு நாதியற்று சுருண்டும் கிடக்கும் பேரவல நிலைமையும் கூட.

கொரோனா கொடூரன் சர்வதேசத்தையும் இன்று முடக்கிப் போட்டிருக்கையில் வறுமையில் வாடும் உழைக்கும் வர்க்கத்தின் நிலையோ சொல்லி மாளாததாகி விட்டது.

உழைப்பாளிகளின் சக்தியை – ஒற்றுமையை – அதன் வலிமையை – ஓங்கி ஒலிக்க வேண்டிய இந்த நாள் உழைப்பாளின் இன்றைய வாழ்நிலை போலவே துவண்டு கிடக்கின்றது.

அரசியல் கட்சிகள், அமைப்புகள், கூட்டுகள், அணிகள் என்று இதுவரை தொழிலாளர் சக்தி மீது குதிரை விட்டுத் தமது செல்வாக்கை வளர்த்துக் கொண்ட தரப்புகள் கூட இந்தப் பேரவல சமயத்தில் தொழிலாளர் வர்க்கத்தை ஏறெடுத்துப் பார்ப்பனவாகத் தெரியவில்லை.

ஏழை – பணக்காரன், ஆள்பவன் – ஆளப்படுபவன், ஒடுக்குபவன் – ஒடுக்கப்படுபவன், சுரண்டுபவன் – சுரண்டப்படுபவன் என்று வர்க்க முரண்பாடுகள் தலைமுறை தலைமுறைகளாய், சந்ததி சந்ததிகளாய், உலகெங்கும் வியாபித்துத் தொடர்கின்றன.

இந்த முரண்பாடுகளில் சிக்கித் திணறி, உழன்றலையும் ஒரு வர்க்கத்தின் பாதிப்பை – அந்தப் பக்கத்திற்குச் செய்யப்பட வேண்டிய நியாயத்தை – உலகுக்கு எடுத்தியம்பி, உண்மையை உறைப்பாக உரைப்பதற்குரியதே இந்தத் தினம்.

ஆனால் இதில் கூட தன்னெழுச்சியைக் காட்ட முடியாது கொரோனாவால் அடங்கப்பட்டிருக்கின்றது ஏற்கனவே அடக்கி, ஒடுக்கப்பட்டு, நலிந்து போய்க் கிடக்கும் உழைப்பாளர் வர்க்கம்.

ஆனால், மறுபுறத்தில் பார்த்தால் வழமையாகக் கோலாகலமாக நடைபெறும் மேதின எழுச்சி நிகழ்வுகளிலும் கூட அந்த உழைக்கும் வர்க்கத்தின் உயர்வுக்காகப் பிரயோசனமாக ஒன்றுமே நடப்பதேயில்லை என்பதும் கூட உண்மைதான்.

வழக்கமாக இத்தினத்தில் நாடுகள் எங்கும் – சர்வதேசம் எங்ஙனும் – மே தினப் பேரணிகளும், ஊர்வலங்களும், கூட்டங்களும், முழக்கங்களும் என்று வீதிகள் களைகட்டும்.

ஆனால், அவை முடிந்த பின்னர் அந்த நிகழ்வுகளினால் தொழிலாளர்களுக்கு கிட்டிய நன்மைகள், சாதகங்கள் என்ன என்று சீர்தூக்கிப் பார்த்தால் பலன் பூச்சியமே என்ற உண்மை வெளிப்படும்.

இந்தப் பூமிப் பந்தையே இயக்கிக் கொண்டிருக்கும் உழைப்பாளர் வர்க்கத்தின் நிலைமையை மேம்படுத்துவதற்காக இந்த மேதினக் கூட்டங்கள், பேரணிகளால் ஏதும் மாற்றம் நிகழ்ந்ததா என்று தேடிப்பார்த்தால் இல்லை என்றே விடை கிடைக்கும்.

மாறாக, தத்தமது மேதினக் கூட்டங்களிலும் பேரணிகளிலும் திரண்ட மக்கள் பற்றியும், அக்கூட்டங்களில் ஆரவாரமாகத் தோற்றிய அரசியல் தலைவர்கள் பற்றியும் அங்கு அவர்கள் முழங்கிய முழக்கங்கள் பற்றியுமே எங்கும் பேசப்படும்.

நாளாந்தம் வியர்வை சிந்தி, இந்த மேதினியை மேம்படுத்திய உழைப்பாளி – தொழிலாளி – தனக்குரித்தான இந்த மே நாளிலும், அவனின் உழைப்பில் பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகளுக்காகவும், அரசியல் தலைமைத்துவங்களுக்காகவும், வீதியில் நின்று, வெயிலில் காய்ந்து, வியர்வை சிந்தி, ஆர்ப்பரித்து கோஷமிட்டு விட்டு வெறுங்கையுடனும் வெற்று வயிறுடனும் வீடு திரும்பும் அவலமே இங்கு நடந்தேறும்.

உண்மையாக, தொழிலாளர்தினம் தொழிலாளர் உயர்வுக்கான விடயங்களை மட்டும் கவனிப்பதாக முன்னெடுக்கப்படுவதாக அமைய வேண்டும்.

ஆனால், இலங்கையில் எப்போதுமே அப்படி நடப்பதில்லை.

அப்படித் தவறாக – தொழிலாளர் நலனுக்கான தினம் தொழிலாளருக்காக அல்லாமல் – வழமையாக நடைபெறுவது போல இங்கு இடம்பெறுவதிலும் பார்க்க – ஏதோ ஒரு காரணத்தால் இப்போது நடைபெறாமல் இருப்பது மேலானதுதான்!

### நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அணிகளிலுள்ள ஏழு தலைவர்கள் கையெழுத்திட்ட கடிதமொன்றை அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தனர்.

ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன், இரா. சம்பந்தன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டிருந்தனர்.

அந்தக் கடிதத்துக்கு பதில் கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அனுப்பிவைத்தார்.

மேற்படி எதிர்க்கட்சிகளின் கடிதத்தில் கையெழுத்திட்டவர்களுக்கு தேர்தலை நடத்துவதில் விரும்பமின்மை தெரிவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், கொரோனாவுக்கு எதிராகப் போராடும் இந்த வேளையில் இவ்வாறான சுயலாப அரசியல் விடயங்கள் எதிர்த்தரப்பினரால் முன்னெடுக்கப்படுவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

### பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியையும், கிளிநொச்சியில் ஒரு பாடசாலையையும், முதல்கட்டமாகப் பொலிஸார் கோரியுள்ள போதிலும் அவற்றை வழங்க பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பொலிஸாருக்கு இதுவரை பாடசாலைகள் வழங்காதபோதிலும் இது தொடர்பான அழுத்தங்கள் தொடர்வதாகத் தகவல்கள் கூறுகின்றன.

### ஊரடங்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் மா அதிபரால் கோரப்பட்ட ஆலோசனைக்கு அமைய சட்ட மா அதிபரால் இந்த அனுமதி வழங்கப்பட்டதாக சட்ட மா அதிபரின் ஒருங்கிணைப்பாளர், அரச சட்டத்தரணி நிசார ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

### மூன்று மாதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், ஆளுநரின் பணிகளை ஒழுங்குபடுத்தி நிர்வாகத்தை முன்னெடுக்க வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அ. பத்திநாதன், ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவன் ஆகியோரைக் கொண்ட குழுவை அனுமதிக்குமாறும் ஆளுநர் தனது கடிதத்தில் கேட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வேறொரு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பதில் ஆளுநராக மூன்று மாதங்களுக்கு நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ்.சார்ள்ஸ், அண்மைக்காலமாக கொழும்பிலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலிருந்தே பணிகளை முன்னெடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்டு தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில், வவுனியா மகாகச்சகொடியைச் சேர்ந்த கொரோனோ தொற்றுக்குள்ளான கடற்படைவீரரின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவருடன் தொடர்புகளைப் பேணியவர்கள் என 9 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த 9 பேரிடமும் சுகாதாரப் பரிசோதகர்களால் பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டு அனுராதபுரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### மணிவண்ணனிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது வீட்டில் வைத்து சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக மணிவண்ணனிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவரிடம் வாக்கு மூலங்களையும் பதிவு செய்து கொண்டு சென்றுள்ளனர்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் தொடர்பில் மணிவண்ணனிடம் இந்த விசாரணைகளைப் பங்கரவாதப் பிரிவினர் மேற்கொண்டிருந்தனர் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, இவ் விடயம் தொடர்பாக மணிவண்ணனைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அவ்வாறு பங்கரவாத விசாரணை பிரிவினர் தனது வீட்டுக்கு வந்தனர் எனவும், மாவீரர் தினத்தில் பங்குபற்றியமை தொடர்பில் தன்னிடம் வாக்குமூலத்தைப் பெற்றிருந்தனர் எனவும் கூறினார்.

எனினும் அந்தக் கூட்டத்தில் பிறிதொரு பிரமுகர் பங்குபற்றினாரா என்பது குறித்தே மணிவண்ணனிடம் விசாரிக்கப்பட்டது என வேறு வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

### மாணவர் திரும்பினர்

இந்தியாவில் இருந்து மேலும் 125 மாணவர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானம் நேற்று முற்பகல் 10.15 அளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து கொல்கத்தா நோக்கி புறப்பட்டு சென்றது. மாணவர்களை அழைத்துக் கொண்டு அந்த விமானம் நேற்றுப் பிற்பகல் 5.15 அளவில் நாடு திரும்பியுள்ளது.

### பிரதமரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பதில் கடிதம் எழுதியுள்ள பின்னணியில் –

பிரதமரின் இந்த அழைப்பை ஏற்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வது அர்த்தமற்றது என சில தலைவர்கள் காட்டமாகக் கருத்து வெளியிட்டனர் என அறிய வந்தது. இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் இன்றும் கூடி ஆராய்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### முழங்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கவைக்கப்பட்டுள்ள ஜா எலயைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை நேற்று முன் தினம் அனுமதிக்கப்பட்ட அந்தப் பெண்ணுக்கு கொரோனா வைரஸ் பரிசோதனைக்கான மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் இன்று மாலை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பெண் இன்று தென்னிலங்கை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவார் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 663ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

### குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில் இந்த அனுமதி யாழ்.மாவட்ட செயலாளரால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் 450 கிராம் எடை கொண்ட பாண் ஒன்றின் விலை 63 ரூபாயாக அதிகரிக்கப்படவுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் மாவின் விலை அதிகரித்தமையாலும் பாண் உற்பத்திக்கான உப மூலப்பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்தமையாலும் யாழ்ப்பாணத்தில் பாணின் விலையை அதிகரிக்க அனுமதியளிக்கவேண்டும் என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், யாழ். மாவட்ட செயலாளரிடம் கோரியிருந்தது.

இந்த நிலையில் யாழ்.மாவட்டத்தில் 450 கிராம் எடை கொண்ட பாண் ஒன்றின் விலை 3 ரூபாயால் அதிகரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

### அதிக விலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாட்டு விலையை மீறி அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ் மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அரச அதிபர் இவ்வாறு கூறினார்.

### 663 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அத்துடன், வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்த 15 பேர் முழுமையாகச் சுகமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 663ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண் உட்பட) அதிகரித்துள்ளது.

154 பேர் முழுமையாகக் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். 7 பேர் உயிரிழந்துள்ளனர். 502 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சமூக இடைவெளியை மறந்த ஆஸி. அமைச்சர் பதவி துறந்தார்



ஆஸ்திரேலியாவில் அரசு பிறப்பித்திருந்த சமூக இடைவெளியைப் பின்பற்றாத டிரேவர் வாட்ஸ் தனது அமைச்சுப் பதவியைத் துறந்தார்..

ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணத்தின் காவல்துறை மற்றும் பயங்கரவாத தடுப்பு இலாகாவின் நிழல் மந்திரியாகப் பதவி வகித்து வந்தவர் டிரேவர் வாட்ஸ். (பிரதான எதிர்க்கட்சி உறுப்பினருக்கு வழுங்கப்படும் மந்திரி நிழல் மந்திரி எனப்படும்) இவர், தேசிய விடுதலைக் கட்சியைச் சேர்ந்தவர்.

டிரேவர் வாட்ஸ், கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது சட்டமன்ற தொகுதியான வடக்கு டூம்பாவோ நகரின் விரைவு வழிச்சாலையில் போக்குவரத்துப் பொலிஸாருடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அவரும் 2 பொலிஸ் அதிகாரிகளும் கொரோனா ஊரடங்கையொட்டி மாகாண அரசு பிறப்பித்திருந்த சமூக இடைவெளி கட்டாயம் என்கிற உத்தரவை மீறியதாக கூறப்படுகிறது.

இது ஆஸ்திரேலியா முழுவதும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த நிலையில் டிரேவர் வாட்ஸ் உள்ளிட்ட மூவருக்கும் தலா ஆயிரத்து 334 ஆஸ்திரேலிய டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

மந்திரியே அரசு உத்தரவை மீறிவிட்டதால் அவர் பதவி விலகவேண்டும் என்கிற கோரிக்கை பல்வேறு தரப்பில் இருந்தும் எழுந்தது.

இந்த நிலையில், டிரேவர் வாட்ஸ் தனது மந்திரிப் பதவியைவிட்டு நேற்று விலகினார்.. அவருக்குப் பதிலாக டான் புருடி என்பவர் காவல்துறை மற்றும் பயங்கரவாத தடுப்பு துணை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.



# 2021இலும் ஒலிம்பிக் நடப்பது சந்தேகமே

## ஜப்பானியப் பிரதமர் தெரிவிப்பு

2021ஆம் ஆண்டிலும் ஒலிம்பிக் போட்டி நடைபெறுவது சந்தேகமே என்று ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெற்று வருகிறது. கடைசியாக 2016ஆம் ஆண்டு பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனி ரோவில் நடைபெற்றது.

இந்த ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஜூலை 24ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 9ஆம் திகதி வரை நடத்தத் திட்டமிடப்பட்டு இருந்தது.

கொரோனா வைரஸ் நோய் தொற்று காரணமாக ஒலிம்பிக் போட்டி ஒரு ஆண்டுக்கு தள்ளிவைக்கப்பட்டது. 2021ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8ஆம் திகதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கொரோனா வைரஸ் 2021க்குள் கட்டுப்படுத்தப்படாவிட்டால் ஒலிம்பிக் போட்டி நிறுத்தப்பட வாய்ப்பு இருப்பதாக டோக்கியோ ஒலிம்பிக் குழு தலைவர் யோஷிரோ மோரி தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் 2021ஆம் ஆண்டிலும் ஒலிம்பிக் போட்டி நடைபெறுவது சந்தேகமே என்று ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

கொரோனா வைரஸ் தொற்று நோய் கட்டுப் படுத்தப்படாத வரை டோக்கியோ ஒலிம்பிக் போட்டி அடுத்த ஆண்டும் நடைபெறாது. ஜப்பானில் அவசர நிலை தொடர்ந்து நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே ஒலிம்பிக் போட்டியை ஒரு ஆண்டுக்கு தள்ளி வைத்ததால் சர்வதேச ஒலிம்பிக் குழுவுக்குப் பல கோடி டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அதன் தலைவர் தெரிவித்துள்ளார்.

# ஜோ பிடெனுக்கு ஹிலாரி ஆதரவு!

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் ஜோ பிடெனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார் முன்னாள் அதிபர் வேட்பாளரான ஹிலாரி கிளிங்ரன்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வருகிற நவம்பர் மாதம் 3ஆம் திகதி நடக்க இருக்கிறது. இந்தத் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டிரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார்.

ஜனநாயக கட்சி வேட்பாளரை தேர்வு செய்வதற்கு மாகாண வாரியாக தேர்தல் நடந்து வருகிறது. இதில் முன்னாள் ஜோ பிடென் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறார். எனவே டிரம்பை எதிர்த்து போட்டியிடும் ஜனநாயக கட்சி வேட்பாளர் இவர்தான் என்பது கிட்டத்தட்ட உறுதியாகி விட்டது.

இதனால் ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் பலரும் தொடர்ந்து, ஜோ பிடெனுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி ஒபாமா, செனட்சபை உறுப்பினர் பெர்னி சாண்டர்ஸ் மற்றும் இந்திய வம்சாவளியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கமலா ஹாரிஸ், பிரமீளா ஜெயபால் உள்ளிட்டோர் ஜோ பிடெனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# ஐ.நாவே சொல்லியாச்சு!

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக நாடுகள் பலவற்றிலும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாடுகளால் கருத்தடை சாதனங்கள் கிடைக்காமல், உலகம் முழுவதும் 70 லட்சம் எதிர்பாராத கர்ப்பங்கள் உருவாகும் என்று ஐநா நடத்திய ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் ஆட்டிப் படைத்து வரும் நிலையில், பெரும்பாலான நாடுகளில் இன்னும் ஊரடங்கு உள்ளது. இதன் தாக்கம் குறித்து ஐ.நா. மக்கள்தொகை நிதியம் ஆய்வு நடத்தி, அதன் முடிவுகளை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது:-

கொரோனாவின் தாக்கமும், அதன் எதிர்வினையும் உலகம் முழுவதும் எப்படி விரிவடையும் என்பது இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. அதே சமயத்தில், பெண்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாக்காவிட்டால், அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணர்த்த இந்த ஆய்வை வெளியிட்டுள்ளோம்.

கொரோனா பாதிப்பு காரணமாக, வைத்தியசாலைகள் கொரோனா நோயாளிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது. பெண்களும், வைரஸ் தாக்கும் அச்சத்தில், வழக்கமான பரிசோதனைகளுக்கு கூட வைத்தியசாலைகளுக்குச் செல்வதில்லை.

ஊரடங்கு கட்டுப்பாடுகளால், பொருட்கள் வருகை தடைப்பட்டுள்ளது. இதனால் கருத்தடை சாதனங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும்.

உலகம் முழுவதும், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் கொண்ட 114 நாடுகளில் சுமார் 45 கோடி பெண்கள் கருத்தடை சாதனங்களைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால், தட்டுப்பாடு காரணமாக, 4 கோடியே 70 லட்சம் பெண்களுக்கு கருத்தடை சாதனங்கள் கிடைக்காத நிலை ஏற்படும்.

இதனால், வரும் மாதங்களில், 70 லட்சம் எதிர்பாராத கர்ப்பங்கள் உருவாகும்.

மேலும், ஆண்களும், பெண்களும் வீட்டிலேயே இருப்பதால், சண்டை அதிகரிக்க வாய்ப்புள்ளது. 6 மாதங்களில், 3 கோடியே 10 லட்சம் சண்டைகள் நடைபெறக்கூடும் என்று கணித்துள்ளோம். 3 மாதங்கள் ஊரடங்கு நீடித்தால், மேலும் ஒரு கோடியே 50 லட்சம் சண்டைகள் நடக்கும்.

அத்துடன், குழந்தைத் திருமணங்கள் லட்சக்கணக்கில் அதிகரிக்கவும் இந்த ஊரடங்கு வழிவகுக்கும். இவற்றையெல்லாம் தடுப்பதற்கு அரசுகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தாத்தா பாட்டியை கொஞ்சி மகிழ குழந்தைகளுக்கு சுவிஸ் அனுமதி

சுவிட்சர்லாந்தில் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை அவர்களது தாத்தா - பாட்டிகள் கொஞ்சி மகிழலாம், கட்டித் தழுவலாம் என்று அரசின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பெரியவர், சிறியவர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் தாக்கி வருகிறது. வயதானவர்களே பெரும்பாலும் கொரோனாவால் பாதிக்கப்பட்டாலும் குழந்தைகளையும், சிறார்களையும்கூட பாதிப்பதும் தெரிய வந்துள்ளது. அதேநேரம் சிறுவர்கள் மூலம் பெரியவர்களுக்கு குறிப்பாக வயோதிபர்களுக்கு கொரோனா பரவக்கூடும் என்கிற அச்சம் இருந்தது.

இதனால் சுவிட்சர்லாந்து அரசு கடந்த பல வாரங்களுக்கு முன்பு 10 வயதுக்கு உட்பட்ட சிறார்களையும், குழந்தைகளையும் அவர்களின் தாத்தா, பாட்டிமார்கள் கொஞ்சி மகிழ்ந்து கட்டித் தழுவ தடை விதித்தது.

குழந்தைகள், சிறார்கள் மூலமாக கொரோனா மூத்த குடிமக்களுக்கு பரவி விடக்கூடாது என்பதற்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மிக அண்மையில் சுவிட்சர்லாந்து விஞ்ஞானிகள் நடத்திய ஒரு ஆய்வின் முடிவில் 10 வயதுக்கு உட்பட்டவர்கள் மூலம் கொரோனா முதியோருக்குப் பரவாது என்பது தெரிய வந்துள்ளது.

10 வயதுக்கு கீழான சிறார்கள் மற்றும் குழந்தைகள் மிக அரிதாகவே கொரோனா வைரஸ் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இவர்களது உடல் இத்தொற்றை எளிதில் ஏற்றுக்கொள்வதில்லை. மேலும் குழந்தைகள் கொரோனா வைரஸை பரப்பி விடுபவர்களும் அல்லர். எனவே இவர்களால் நோயாளிகளுக்கோ, முதியவர்களுக்கோ எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று தெரிவித்தார் நாட்டின் பொதுச் சுகாதாரத்துறை தலைவர் டேனியல் கோச்.

இதைத்தொடர்ந்து 10 வயதுக்கு உட்பட்ட சிறார்களையும், குழந்தைகளையும் அவர்களது தாத்தா - பாட்டிகள் எப்போதும்போல் கொஞ்சி மகிழலாம், கட்டித் தழுவலாம் என்று சுவிட்சர்லாந்து அரசின் சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

# வடகொரிய அதிபர் இருக்கிறார்; ஆனால் இல்லை!

வடகொரியா தலைவர் கிம் உயிருடன் இருக்கிறார் எனினும் அவரால் நிற்கவோ, நடக்கவோ முடியாது என்றும் வடகொரியா முன்னாள் தூதரக அதிகாரி தே யோங் ஹோ தெரிவித்தார்.

வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன், கடந்த ஆம் திகதிக்குப் பிறகு வெளியுலகத்துக்கு வராத நிலையில், இதய அறுவை சிகிச்சையைத் தொடர்ந்து, அவர் இறந்துவிட்டார் என்றும், கோமா நிலையில் இருக்கிறார் என்றும் உறுதிபடுத்தப்படாத செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

ஆனால் அண்டை நாடான தென்கொரியா இந்தச் செய்திகளை மறுப்பதோடு, கிம் நலமாக இருக்கிறார் என்று தொடர்ந்து கூறிவருகிறது. அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பும், கிம் நலமுடன் இருக்கிறார் என்று, தான் நம்புவதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கிம் ஜாங் அன் உயிருடன் இருக்கிறார் என்றும், ஆனால் அவரால் நிற்கவோ, நடக்கவோ முடியாது என்றும் வட கொரிய தூதரக பணியிலிருந்தும், அந்த நாட்டை விட்டும் வெளியேறிய தே யோங் ஹோ தெரிவித்துள்ளார்.

பிரபல தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின்போது இதுபற்றி அவர் கூறியதாவது: -

கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற வடகொரிய நிறுவனரும் கிம்மின் தாத்தாவுமான கிம் இல் சுங் பிறந்த நாள் விழாவில் பங்கேற்காததில் இருந்து கிம்மிற்கு உடல் நலமில்லை அல்லது காயப்பட்டிருக்கிறார் என்பது மட்டும் உறுதி. அவருக்கு உண்மையிலேயே ஏதாவது அறுவை சிகிச்சையோ வேறு ஏதேனும் நடந்ததா என்று தெரியவில்லை. ஆனால், ஒரு விஷயம் தெளிவு, அவரால் தானாக எழுந்து நிற்கவோ, நடக்கவோ முடியாது. இவ்வாறு அவர் கூறினார்.

வடகொரியாவில் இருந்து வெளியேறி, தென்கொரியாவில் வாழ்ந்து வரும் தே யோங் ஹோ அண்மையில் நடைபெற்ற தென்கொரிய நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னையில் 98 வீதத்தினருக்கு அறிகுறி ஏதுமற்ற கொரோனா!

சென்னையில் தொற்று ஏற்பட்டவர்களில் 98 சதவீதம் பேருக்கு எந்த அறிகுறியும் இருக்க வில்லை என சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் தலைநகர் சென்னையில் கடந்த சில தினங்களாக கொரோனா தொற்றுக்கு உள்ளானோர் எண் ணிக்கை இரண்டு இலக்கங்களைத் தாண்டியே உள்ளது.

சுகாதாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட தகவலின்படி, சென்னையில் மட்டும் 768 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைக்கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளைத் தமிழக அரசு எடுத்து வருகிறது.

சென்னையில் தொற்று ஏற்பட்டவர்களில் 98 சதவீதம் பேருக்கு எந்த அறிகுறியும் இருக்கவில் லை என சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சென்னை மாநகராட்சி ஆணையர் பிரகாஷ் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். "சென்னையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் 98 சதவீதம் பேருக்கு எந்த அறிகுறியும் இல்லை. பாதுகாப்பு கருதியே கோயம் பேடு சந்தையில் சில்லறை விற்பனை நிறுத்தப் பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

# சத்தீஸ்காரில் பெண் ஒருவர் சுட்டுக்கொலை!

சத்தீஸ்கார் மாநிலத்தில் பொலி ஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பெண் நக்சலைட்டு சுட்டுக்கொல்லப் பட்டார். உயிரழந்தவர் நக்சலைட் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சத்தீஸ்கார் மாநிலத்தில் நக்ச லைட்டுகள் ஆதிக்கம் செலுத்தி வரு கின்றனர். அவர்களை அடக்குவ தற்காக மாவட்ட ரிசர்வ் பொலிஸா ருடன் இணைந்து மாநில ஆயுதப் படை பொலிஸார் தீவிர சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டு வருகின் றனர்.

இந்த நிலையில் அங்குள்ள நாராயண்பூர் மாவட்டத்தில் காடெ மெட்டா பொலிஸ் முகாமுக்கு அரு கில் உள்ள மலையடிவாரத்தின் காட்டுப்பகுதியில் நேற்றுப் பொலி ஸார் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டு இருந்தபோது, அங்கு பதுங்கி இருந்த நக்சலைட்டுகள் துப்பாக்கியால் சுட்டும், வெடிகுண் டுகளை வீசியும் தாக்குதல் நடத்தி னர். இதில் 2 போலீசார் காயம டைந்தனர்.

பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதில் ஒரு பெண் உயிரிழந் தார். அதனருகில் இருந்து 2 துப் பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

# ஆயிரத்து 300 கி.மீ தூரம் நடந்தே வந்த தமிழர்!



மராட்டிய மாநிலத்தில் இருந்து சொந்த ஊரான தி ருக்கோவிலூருக்கு ஆயிரத்து 300 கி.மீ. நடந்தே வந்த வாலி பரை குடும்பத்தார் பார்த்ததும் மகிழ்ச்சி அடைந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் அருகே உள்ள சு.கொல்லூரை சேர்ந்தவர் சதீஷ்குமார் (வயது 25). இவர் மராட்டிய மாநிலம் உா நகரில் நெட்வொர்க் மார்க்கெட்டிங் நிறுவனத்தில் பணியாற்றி வருகிறார்.

தற்போது ஊரடங்கு உத்தரவு காரணமாக அங்கு வேலை இன்றி தவித்தார். உணவும் கிடைக்காததால் சொந்த ஊருக்கு பயணிக்க முடிவு செய்தார். அதன்படி சதீஷ்குமார் கடந்த 14 ஆம் திகதி சொந்த ஊருக்கு நடக்க தொடங்கினார். ஐதராபாத், பெங்களூரு வழியாக இரவு - பகல் என பாராமல் நடந்தே வந்தார். அப்போது அவருக்கு வழிநெடுகிலும் தன்னார்வலர் கள், பொலிஸார் உணவு வழங்கினார்கள்.

நேற்று காலை சதீஷ்குமார் திருவண்ணாமலை வந்து சேர்ந்தார். அதன் பின்னர் அங்கிருந்து திருக்கோவிலூர் நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். வரும் வழியில் வெறையூர் பொலிஸார் சதீஷ் குமாரை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்தி னார்கள். வெளிமாநிலத்தில் இருந்து வந்தவர் என்பதால் அவரை ஊருக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.

இதையடுத்து முன்னாள் அமைச்சரும் சட்டசபை உறுப்பின ருமான பொன்முடிக்கு அங்குள்ளவர்கள் தகவல் தெரிவித்தனர். பொன்முடி பொலிஸாருடன் பேசியதால் சதீஷ்குமார் விடுவிக் கப்பட்டார். இது குறித்து உடனடியாக செல்போன் மூலம் சதீஷ் குமாரின் உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின் னர் கொல்லூர் கிராமத்தில் இருந்து மோட்டார் சைக்கிளில் வெறையூர் கிராமத்துக்கு உறவினர்கள் விரைந்தனர். அங்கி ருந்த சதீஷ்குமாரை வீட்டுக்கு அழைத்து வந்தனர். அவரை பார்த்ததும் குடும்பத்தார் மகிழ்ச்சி அடைந்தனர். இவர் 16 நாள் களில் ஆயிரத்து 300 கிலோ மீற்றர் தூரம் நடந்தே வந்திருக் கிறார். .

# சூகியுடன் மோடி ஆலோசனை!

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மியான்மர் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகியுடன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவது தொடர் பாக பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் மோடி கடந்த சில வாரங்களாக தொடர்ந்து ஆலோசித்து வருகிறார்.

அந்த வரிசையில் மியான்மர் நாட்டு அரசு ஆலோசகர் ஆங் சான் சூகியுடனும் பிரதமர் மோடி ஆலோசனை நடத்தினார்.

இதுதொடர்பாக, பிரதமர் மோடி வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மியான்மர் நாட்டின் அரசு ஆலோசகர் ஆங் சான் சூகியுடன் ஆலோசனை நடத்தினேன்.

அப்போது கொரோனா பெரும் தொற்றால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சவால்கள் மற்றும் சுகாதாரச் சவால்கள் குறித்து இருவரும் ஆலோ சித்தோம். மியான்மருக்குத் தேவையான உதவி களைச் செய்ய இந்தியா தயாராக உள்ளது எனப் பதிவிட்டுள்ளார்.



# மேதினமாய் மலருமிந்த பெருநாளில் பேதலித்து நிற்கின்றார் தொழிலாளர்!

உழைக்கின்றார் வாழ்வினிலே உயர்ந்தநாள்
உழைப்பினுக்கு மதிப்பளிக்கும் உன்னதநாள்
அந்நாளில் தொழிலாளர் அனைவருமே
அரைவயிறாய் கால்வயிறாய் அழுகின்றார்!

மேதினமாய் மலருமிந்த பெருநாளில்
பேதலித்து நிற்கின்றார் தொழிலாளர்
எங்கிருந்தோ வந்தவிந்த கொரனோவால்
ஏக்கமுற்று வாடுகிறார் தொழிலாளர்!

ஊர்முழுக்கப் பரவிவரும் கொரனோவால்
ஊனமுற்றுக் கிடக்கிறது தொழிலெல்லாம்
ஊதியத்தை எதிர்பார்க்கும் கூட்டமெலாம்
உயிர்போகும் ஆபத்தை நெருங்குகிறார்!

முதலாளிக் கெதிராகப் போராடி
முன்னின்று எடுத்தார்கள் சுதந்திரத்தை
கொரனோவுக் கெதிராகப் போராடி
கொடுந்துன்பம் எய்துகிறார் தொழிலாளர்!

ஆட்சி அதிகாரத்தில் உள்ளார்கள்
அனுசரணை முதலாளி பக்கமேயாம்
அலுப்பின்றி உழைக்கின்ற தொழிலாளர்
அவர்கண்ணில் பட்டுவிடல் அரிதேயாம்!

மேடையேறி தொழிலாளர் நலனுரைப்பார்
மேடைவிட்டு கீழ்வந்தால் அதைமறப்பார்
தொழிலாளர் என்னாளும் துயரென்னும்
வலையதனில் அகப்பட்டே வதைபடுவார்!

என்னாளும் இன்னலுறும் தொழிலாளர்
மேநாளில் சுதந்திரமாய் பேசிடுவார்
அந்நாளும் பேசாத நாளாக்க
பொல்லாத கொரனோவும் வந்ததிங்கே!

மேடைபோட்டு மேதினத்தில் தொழிலாளர்
மேலான பலகருத்தை முழங்கிடுவார்
வாய்விட்டுக் கருத்துரைக்க வாய்க்கும்நாளும்
வாய்க்காமல் செய்ததிந்த கொரனோவும்!

மகாதேவி ஐயர் ஜெயராமசர்மா - மெல்பேண், அவுஸ்திரேலியா

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com



- ஆர்.நடராஜன் -

# மே தினம் என்னும் தொழிலாளர் தினம்

இன்று மே தினம் என்னும் தொழிலாளர் நாள்.

இந்த மே தினம் வந்தது எப்படி? உலகம் முழுவதும் உள்ள தொழிலாளர்கள் மே முதலாம் திகதியை மே தினம் என்றும் தொழிலாளர் தினம் என்றும் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் வளர்ச்சியடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 12 முதல் 18 மணி நேரம் வரை வேலை செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது.

குறைந்த வேலை நேரத்துக்காக நடத்தப்பட்ட தொழிலாளர்களின் போராட்டம், மே தினம் உருவாவதற்கு முக்கிய காரணமாய் அமைந்தது. தொழிலாளர்களின் இந்தக் கோரிக்கை மிகப்பெரிய அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. அமெரிக்காவில் தொழிற்துறை ஓர் அமைப்பாக வளர்ந்த பொழுது இப்போராட்டம் வெளிப்பட்டது.

இதற்கு எதிரான குரல்கள் பல்வேறு நாடுகளில் ஆங்காங்கே எழத் தொடங்கியன. இதில் குறிப்பிடத்தக்கது இங்கிலாந்தில் தோன்றிய சாசன இயக்கம் (Chartists). 6 முக்கியக் கோரிக்கை களை முன்வைத்து தொடர் இயக்கங்களை நடத்தியது. அதில் குறிப்பிடத்தக்கது 10 மணி நேர வேலை என்ற கோரிக்கை.

1830 ஆம் ஆண்டு, பிரான்சில் நெசவுத் தொழிலாளர்கள் தினமும் 15 மணி நேரம் உழைத்து வந்தனர்.

இதனை எதிர்த்து அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 1834 இல் ஜனநாயகம் அல்லது மரணம் என்ற வாசகத்தை முன்வைத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஆனால், இது தோல்வியில் முடிந்தது. அவுஸ்திரேலியா விலுள்ள மெல்போர்னில் கட்டடத் தொழிலாளர்கள் 1856 இல் முதன்முதலாக 8 மணி நேர வேலை என்ற



கோரிக்கையை முன்வைத்தனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றனர்.

1896 ஏப்ரலில் லெனின் மே தினத்திற்காக எழுதிய சிறுபிரசுரத்தில், ரஷ்யத் தொழிலாளர்களின் நிலைமை குறித்து விரிவாக அலசினார். மேலும், ரஷ்யத் தொழிலாளர்களின் பொருளாதாரப் போராட்டம் அரசியல் போராட்டமாக எழுச்சி கொள்ள வேண்டும்என்பதையும் வலியுறுத்தினார். தொழிலாளிகளின் 8 மணி நேர வேலைக்கான போராட்டங்களே ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்டன எனலாம்.

‘அதிகாலை முதல் அந்தி சாயும் வரை’ என்பதுதான் அப்போதெல்லாம் வேலை நாள். இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே வெளிக் காட்டினர்.பதினாறு, பதினேழு ஏன்பதினெட்டு மணிநேர வேலை என்ப தெல்லாம் அப்போது சாதாரண விடயங்கள், 1806 ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தொழிலாளர் இயக்கங்களை இணைத்து, அமெரிக்கத் தொழிலாளர் கூட்டமைப்பு என்ற இயக்கம் உருவாக்கப் பட்டது.

இந்த இயக்கம் 1886, மே முதலாம் நாள் நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு அறைகூவல் விடுத்தது. இந்த இயக்கமே மே தினம் தோன்றக் காரணமாக இருந்தது எனலாம்.

1889 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸில் சோசலிசத் தொழிலாளர்களின் சர்வதேசத் தொழிலாளர் நாடாளுமன்றம் கூடியது. 18 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என்று முடிவு செய்தனர். 1890 மே முதலான்நாள், அனைத்துலக அளவில் தொழிலாளர்கள் இயக்கங்களை நடத்திட அறைகூவல் விடுக்கப்பட்டது. இந்த அறைகூவலே, மே முதல் நாள் சர்வதேச தொழிலாளர் தினமாக - மே தினமாக - வருவதற்குக் காரணமாக அமைந்தது. அடுத்த ஆண்டிலிருந்து உலக நாடுகள் பலவற்றில் விடுமுறையும் அறிவிக்கப்பட்டது.

அமெரிக்காவில் ஆரம்ப நான்களில் பல வேலை நிறுத்தங்கள் நிகழ்ந்தன. ‘அதிக ஊதியம் வேண்டும்’ என்பதுதான் இந்த வேலைநிறுத்தங்களில் முக்கிய கோரிக்கையாக எழுப்பப்பட்டது. இருந்த போதிலும் தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளை வகுத்த போதெல்லாம் குறைந்த வேலைநேரம், சங்கம் சேரும் உரிமை போன்ற பிரச்சினைகளை முன்வைத்தனர். தொழிலாளர்கள் வெகுவாக சுரண்டப்பட்ட காலகட்டம் அது. நீண்ட வேலை நேரங்கள் அவர்களை மேலும் துன்பப்படுத்தின. எனவே வேலை நேரம் குறைக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கையாக எழுப்பப்பட்டது.

‘அதிகாலை முதல் அந்தி சாயும் வரை’ என்பதுதான் அப்போதெல்லாம் வேலை நாள். இதனால் ஏற்பட்ட மனக்குமுறல்களை அமெரிக்கத் தொழிலாளர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே வெளிக்காட்டினர். பதினாறு, பதினேழு ஏன்பதினெட்டு மணிநேர வேலை என்பதெல்லாம் அப்போது சாதாரண விடயங்கள், 1806 ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களின் தலைவர்கள் மீது சதி வழக்கு போடப் பட்டது. இந்த வழக்கு விசாரணையின் போது தொழிலாளர்கள் பத்தொன்பது, இருபது மணி நேரங் கள் வேலை வாங்கப்பட்டார்கள் என்ற வியம் வெளியே வந்தது.

1820 மற்றும் 30களில் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் என்று பற்பல வேலைநிறுத்தங்கள் நிகழ்ந்தன. பத்து மணி நேர வேலைநாள் என்ற கோரிக்கை பல தொழில் மையங்களில் முன்வைக்கப்பட்டது. பிலடெல்பியா நகர இயந்திரத் தொழிலாளர்களின் சங்கம்தான் உலகின் முதற் தொழிற்சங்கமாக கருதப்படுகிறது. இந்த தொழிற்சங்கம் உருவான இரு ஆண்டுகளுக்குப் பின்புதான் இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் உருவாகத் துவங்கின. பத்து மணி நேர வேலை நாள் என்ற கோரிக்கையை முதன் முதலாக வைத்த பெருமை இச்சங்கத்துக்கே உண்டு. 1827இல் பிலடெல்பியாவில் கட்டிடங்கட்டும் தொழிலாளர்கள் நடத்திய வேலைநிறுத்தத்தில்தான் இந்தக் கோரிக்கை பிரதானமாக வைக்கப்பட்டது. 1834இல் நியூயோர்க்கில் ரொட்டி தொழிலாளர்கள் எகிப்திய அடிமைகளைக் காட்டிலும் அதிகம் துன்புற்றனர். நாளொன்றுக்கு அவர்கள் பதினெட்டிலிருந்து இருபது மணி நேரம் வேலை செய்ய வேண்டி வந்தது என்ற செய்தியை அப்போது வெளியான ‘தொழிலாளருக்காக வாதிடுபவன்’ **(Workingmen's Advocate)** என்ற பத்திரிகை வெளியிட்டது. பத்துமணி நேர வேலை நாளுக்கான இப்போராட்டங்கள் விரைவிலேயே ஒரு இயக்கமாக உருவெடுத்தன். 1837இல் ஏற்பட்ட நெருக்கடி ஒரு தடையாக இருந்தபோதிலும் வேன் பியுரன் தலைமையிலான அரசாங்கம், அரசு



ஊழியர்கள் அனைவருக்கும் பத்து மணி நேர வேலைநாள் அறிவித்தது. எல்லோருக்கும் பத்து மணி நேர வேலை நாள் என்பதற்காக போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. பல தொழிற்சாலைகளில் இக்கோரிக்கை வெற்றியடைய, உடனேயே தொழிலாளர்கள் 8 மணி நேர வேலை நாள் என்ற கோத்தை எழுப்பினர்.

(10 பக்கம் பார்க்க)

# சவால்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்ள உழைக்கும் வர்க்கமாக ஒன்றிணைவோம்!

## பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு



'சவால்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்ள உழைக்கும் வர்க்கமாக ஒன்றிணைவோம்!' என்று அழைப்பு விடுத்திருக்கின்றார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ. இன்றைய மே தினத்தை ஒட்டி உழைப்பாளர்களுக்குத் தாம் விடுத்த செய்திலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

முழு உலகிலுமுள்ள வேலை செய்யும் மக்கள் இம்முறை கோவிட் - 19 தொற்றுநோய்க்கு முகங்கொடுத்த நிலையிலேயே உலக தொழிலாளர் தினத்தைக் கொண்டாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே எமது தேசிய சமய வைபவங்களைப் போன்றே சர்வதேச தொழிலாளர் தினத்தையும் வழமையான செயற்பாடுகள் இன்றி கொண்டாட வேண்டியேற்பட்டுள்ளது.

தொழிலாளர் மக்களின் பலம், ஒற்றுமையை வெளிப்படுத்தும் வகையிலான ஊர்வலங்கள் மற்றும் கூட்டங்கள் எதுவுமில்லாத நிலையிலும் எமது பலத்தினையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்துவதற்கான ஒரு வழிமுறை எமக்கு உள்ளது. அது சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி செயற்பட்டு, தொற்றினை ஒழிப்பதற்காகப் போராடுவோருக்கு வேலை செய்யும் மக்களின் துணிச்சலையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாகும்.

கோவிட் - 19 தொற்றுநோய் வேலை செய்யும் மக்களின் எதிர்காலத்தில் பாதிப்புச் செலுத்தும் என்பதை மறைக்க முடியாது. இன்று போன்றதொரு தினத்தில் அந்த சவால்கள் தொடர்பாக வேலை செய்யும் மக்களை விழிப்புணர்வூட்டுவது அந்த சவால்களை வெற்றிக் கொள்ள உதவியாக அமையும். எமது வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்கள், இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளில் இயங்கும் தொழிற்துறை சார்ந்த ஊழியர்கள், சுற்றுலாக் கைத்தொழில் போன்ற கைத்தொழில்களில் ஈடுபடுவோர் என அனைவரும் கோவிட் தொற்றுநோயின் சவாலை எதிர்நோக்கியுள்ளனர். அத்துறைகளில் பணியாற்றும் இலட்சக்கணக்கான வேலை செய்யும் மக்களின் இருப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்குக் காணப்படுகிறது.

இது வரை காலமும் உலகம் அங்கீகரித்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் ஆற்றலை கோவிட் தொற்று கேள்விக்குட்படுத்தி வருகிறது. அத்துடன் கோவிட் - 19 தொற்றுநோய் இலங்கை பின்பற்றி வந்த பொருளாதாரக் கொள்கையிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்ற பாடத்தைக் எமக்கு கற்பித்து வருகிறது.

எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கான உளப்பலத்துடனேயே இச்சந்தர்ப்பத்தில் நாம் செயற்படுகிறோம். ஒரு மாத காலத்திற்கு மேலாக நாட்டின் பிரதான நகரங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போதிலும், அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துகள் உள்ளிட்ட பொருள்களைத் தட்டுப்பாடின்றி பேணிச் செல்கிறோம். 15 இலட்சத்திற்கு மேற்பட்ட அரச சேவை ஊழியர்களுக்கான சம்பளத்தினைத் தொடர்ச்சியாக வழங்குவதுடன், நாளாந்த தொழில்களை மேற்கொள்ள முடியாத எழுபத்தி நான்கு இலட்சம் பேருக்கு வாழ்வாதார நிவாரணம் வழங்கி வருகிறோம்.

அத்துடன், இந்தக் கடினமான சூழ்நிலையில் வேலை செய்யும் மக்களுடன் தொடர்புபடும் கைத்தொழில்கள் மற்றும் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான வரிச் சலுகைகளையும் வழங்கியுள்ளோம். வேலை செய்யும் மக்களின் பலத்தினை ஒன்றிணைத்த, உலகின் கொடூரமான தீவிரவாதத்துடன் போராடி வெற்றி பெற்ற நாம் இவ்வாறான பிரச்சினைகளின் போது மண்டியிட மாட்டோம். கடந்த காலத்தின் மீது குற்றஞ் சுமத்தியவாறு புலம்பிக் கொண்டிருக்கும் பழக்கமும் எம்மிடம் இல்லை.

உருவாகும் நிலைமைக்குத் தீர்வாக தனித்துவமான பொருளாதாரக் கொள்கையொன்றைக் கட்டியெழுப்பி தன்னிறைவான பொருளாதாரமொன்று தொடர்பாக அனைவரும் நம்பிக்கை வைக்க வேண்டியுள்ளது. இதுவே கோவிட் - 19 தொற்றுநோய் மூலம் நாம் கற்றுக்கொண்ட பாடமாகும். நாம் அன்று முதல் அரச துறைக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளைப் பாதுகாத்து, உள்நாட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டுள்ளோம். கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக அந்தக் கருத்து மக்கள் மத்தியில் உறுதிப்படுத்தப்பட்டமை எமக்குப் பாரிய துணிச்சலை வழங்குகிறது.

எனவே, இந்த உலக தொழிலாளர் தினத்தன்று கோவிட் தொற்றுநோய்க்கு எதிராகப் போராடுகின்ற சுகாதாரப் பிரிவினர், முப்படையினர், அரச அதிகாரிகள் உட்பட அனைத்துத் துறைகளையும் வேலை செய்யும் மக்கள் கௌரவிக்க வேண்டும். நாம் இவ்வாறான சவால்களைத் துணிச்சலுடனேயே ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு வேலை செய்யும் மக்களுடன் இணைந்து வேலை செய்து, பெற்றுக்கொண்ட உந்து சக்தி எம்மிடம் உள்ளது. உங்கள் அனைவருக்கும் சௌபாக்கியமான, திடவுறுதி மிகுந்த எதிர்காலம் அமைய வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

# இடர்காலத்தில் பாதிக்கப்படும் உழைப்பாளர்களை காப்போம்

## சமத்துவக் கட்சியின் சந்திரகுமார் உறுதி

எந்த இடர்காலத்திலும் முதலில் அதிகம் பாதிக்கப்படுவது உழைப்பாளர்களே. அவ்வாறே இந்தக் கொரோனா இடரிலும் உழைப்பாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களைப் பாதுகாப்பதோடு, அவர்களின் உரிமைகளையும் வலியுறுத்வோம் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மேதினம் நாளில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொரோனா வைரஸ் தொற்று அபாயத்திலும் உயிரிழப்புகளின் நெருக்கடியிலும் உலகம் சுருண்டு போயிருக்கும் இந்த நாள்களில் அதிகமதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தொழிலாள வர்க்கத்தினரேயாவர். இயல்பான சூழலிலேயே நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்குப் பெரும் சிரமப்படும் தொழிலாளர்கள், சிறு விவசாயிகள், சிறு வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி மற்றும் வாடகை வண்டி ஓட்டுநர்கள், சிகை அலங்கரிப்பாளர்கள், கடற்றொழிலாளர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போராளிகளாகச் செயற்பட்டோர், மாற்றுவலுவுள்ளோர் எல்லாம் இப்பொழுது மிகமிகச் சிரமப்படுகின்றனர்.

எமது சூழலில் இவர்களுக்கான சிறிய அளவிலான உதவிகள் பல்வேறு தரப்பினரால் கிடைக்கப் பெற்றாலும் இந்த உதவிகள் இவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானவை அல்ல. இவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்திப் பாதுகாப்பும் உத்தரவாதமும் உடையதொரு வாழ்க்கையை உருவாக்காத வரையில் இவர்களுடைய பிரச்சினை ஒரு போதுமே தீரப்போவதில்லை. மட்டுமல்ல, இந்த மாதிரி இடர் காலத்தின்போதெல்லாம் இவர்கள் பெரும் நெருக்கடியான நிலைவரத்தைச் சந்திக்க வேண்டியவர்களாவும் உள்ளனர். அந்தளவுக்கு இவர்களுடைய நிலைமை பாரதூரமானதாக உள்ளது.

எனவேதான் இந்தப் பாதக நிலையை மாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி இந்த மக்கள் போராடி வருகின்றனர். ஒவ்வொரு மேதினத்தின் போதும் சமத்துவக் கட்சியினராகிய நாமும் இதனையே வலியுறுத்தி வருகிறோம். இந்த மேதினத்தின்போதும் இதை நாம் அழுத்தமாக முன்வைத்துப் பேசுகிறோம். எமது அரசியல் முன்னெடுப்பில் நாம் தொழிலாளர்களின் நலன்களையே முதற்கவனமெடுத்துச் செயற்பட்டு வருகிறோம்.

முதலாளித்துவ நாடுகளிலேயே தொழில் இழப்போ, வருமான இழப்போ நேருமிடத்து அந்தக் குடும்பங்களையும் அந்த மனிதர்களையும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும்போது, எமது நாட்டில் இன்னமும் உழைப்பாளர்கள் எந்த உத்தரவாதமும் இல்லாமல் நிர்க்கதியான வாழ்க்கையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்பது வருத்தத்திற்குரியது. இந்த நிலைமையை நாம் அனைவரும் கூடி மாற்றியமைக்க வேண்டும் என எமது மேதினப் பிரகடனமாக இதை நாம் வெளிப்படுத்திக் கொள்கிறோம். கொரோனா தொற்றானது இந்த ஆண்டு மேதின எழுச்சியையும் கட்டுப்படுத்தியுள்ளது. ஆனாலும் எமது நெஞ்சத்து நினைவுகளில் மேதின எழுச்சியை, தொழிலாளர்களின் உணர்வுகளை, அவர்களுடைய பிரச்சினையை, அவர்களுடைய எதிர்காலத்தை நிறுத்திக் கொள்கிறோம்.

இந்த உலகம் உழைப்பாளர்களினால் ஆனது. அவர்கள் உருவாக்கிய உலகத்திலேயே எல்லோரும் வாழக்கூடியதாக உள்ளது. அப்படி வாழும் அனைவரும் இந்தத் தொழிலாள வர்க்கத்தை வாழ வைக்க முன் வர வேண்டும். இது ஒவ்வொருவருக்குமான பொறுப்பாகும்.



இப்போதைய சூழலில் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படும் ஊரடங்கினாலும் போக்குவரத்துத் தடை, தனிமைப்படுத்தல் நிலைமைகளினாலும் தொழிற்றுறை முடக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தொழில்முடக்கம், வருமான இழப்பு போன்றவற்றினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு நாம் அனைவரும் கை கொடுத்து உதவ வேண்டும். இதை எமது வரலாற்றுக் கடமையாகவும் மேதினத்தின் பொறுப்புமிக்க பணியாகவும் மேற்கொள்வோம்.

அடுத்து வரும் நாள்கள் எப்படியிருக்கும் என்று திட்டமிட முடியாத அளவுக்கே உலக நிலைமை உள்ளது. இந்தச் சூழலிலும் தமது பொருளாதார நலன்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றன வல்லரசுகளும் உலக முதலாளித்துவ சக்திகளும். இவை தொழிலாள சமூகத்தைக் கவனத்திற் கொண்டு தமது தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம்..

உழைப்பாளர்களே இந்த உலகத்தின் படைப்பாளர்கள். அவர்களை காப்பதும் போற்றுவதும் நம் கடமையாகும்.

ஒன்று படுவோம் தோழர்களே! விடுதலை பெறுவோம்.! - என்று உள்ளது.

# மக்களைப் பாதுகாப்பதற்கு அரசு உடனடி உதவி வழங்கவேண்டும்

## சிவாஜிலிங்கம் கோரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே. 01

வீட்டை விட்டு வெளியே வந்தால் கொரோனோ கொல்லும் என்பது போன்றே வீட்டிற்குள் இருந்தால் வறுமை கொல்லும் என்ற நிலைமையே தற்போது ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமா எம்.கே.சிவாஜிலிங்கம், மக்களைப் பாதுகாக்க அரசு உடனடி உதவியை வழங்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

ஆகைஆல் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 3000 ருபா என்ற அடிப்படையில் இரண்டு மாதத்திற்கு அவரவர் குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நிதி உதவியை அரசு வழங்க வேண்டுமென்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

நவீன துட்டைகைமுனு போன்றே னாதிபதி செயற்படுகின்றார். அவர் துட்டகைமுனு முன்பாக பதவிப்பிரமாணம் செய்திருந்த நிலையில் தற்போது துட்டகைமுனுவாகவே தன்னுடைய நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றார்.

அவ்வாறு அவர் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளின் தொடராக பௌத்த மத பீடங்களை அழைத்து ஆலோசனை நடத்தி முப்படைகளையும் கொண்டு தனது ஆட்சியை கொண்டு செல்கிறார். அரசமைப்பு விவகாரம் குறித்து பௌத்த மதபீடங்களுடன் பேசிவிட்டு தீர்மானங்களையும் எடுக்கின்றார்.

நாட்டில் பேரிடராகக் கொரோனோ தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த தாக்கத்தைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை, மக்களையும் பாதுகாக்கவேண்டிய அவசியமும் இருக்கிறது. ஆனால் நடவடிக்கை எடுப்ப தாகக் கூறிக் கொண்டு படையினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் விட்டதால் இந்தப் பாதிப்பு இன்று அதிகரித்து வருகின்றது.

படையிரைக்கொண்டு கொரோனாவைக் கட்டப்படுத்த நடவடிக்கை எடப்பதாக கூறப்பட்ட நிலையில் இன்று கொரோனோ காவிகளாக படையினரே மாறியிருக்கின்றனர். இதனால் படையினரைக் கண்டாலே பொது மக்கள் அச்சப்படும் நிலைமை உள்ளது.

குறிப்பாக அரச உத்தியோகத்தர்கள் முதல் வேறு தொழில்களுக்குச் சென்றவர்கள் வேறு தேவைகளின் அடிப்படையில் வெளி மாவட்டங்களுக்குச் சென்ற பலர் அரசின் ஊரடங்கள் மீண்டும் தமது மாவட்டங்களுக்கு வர முடியாமல் அவதிப்பட்டனர். ஆனா ல் படையினருக்கு அவ்வாறு இல்லாமல் விடுமுறைகளும் வழங்கப்பட்டன. அது இன்றைக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில் தற்போது தான் விடுமுறைகளை இரத்தச் செய்கின்றனர்.

குறிப்பாக சொல்வதானால் வெளியே வந்தால் கொரோனோ கொல்லும். வீட்டிற்குள்ளேயே இருந்தால் வறுமை கொல்லும் என்ற நிலைமை வந்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு தற்போது அரசு 5000 ரூபாவைக் கொடுப்பனவாக வழங்கியிருக்கிறது. இது போதுமா என்ற கேள்வி இருக்கிறது. ஆகவே குடும்பத்திலுள்ள ஒரு உறுப்பினருக்கு 3000 என்ற அடிப்படையில் குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் இரண்டு மாதத்திற்கான கொடுப்பனவை அரசு வழங்கவேண்டும்.

தற்போது மிக மோசமான நிலையில் நாங்கள் பயணிக்கின்ற நிலைமையில் புலம் பெயர் தேசங்கள் உள்ள உறவுகளினதும் உள்ளூரிலும் உள்ள கொடையாளர்களினதும் உதவிகளினால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால் அந்த உதவிகள் போதுமானதாக இல்லை. ஆகையால் பாதிக்கப்பட்ட மக்களை அந்தப் பாதிப்புக்களிலிருந்து மீட்டெடுப்பதற்கும் பஞ்சம் பட்டினியிலிருந்து தப்புவதற்கும் அரசு அவர்களுக்கு உதவியை வழங்க வேண்டுமென்று கோருகின்றோம் - என்றார்.



# மே தினம் என்னும் .....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சங்க இயக்கத்தின் அதிவேக வளர்ச்சியால் 1850களில் இக்கோரிக்கை புதிய உத்வேகத்தை அடைந்தது. 1857 இல் ஏற்பட்ட நெருக்கடி இந்த உத்வேகத்திற்கு ஒரு தடையானது. இருந்தபோதிலும் நன்கு வளர்ச்சி பெற்ற தொழிற்சங்கங்கள் அதற்கு முன்பே இக்கோரிக்கையை அடைந்தன. இவ்வாறு குறைந்த வேலை நேரத்துக்கான போராட்டம் அமெரிக்காவில் மட்டும் நிகழவில்லை. முதலாளித்துவத்தின் கீழ் தொழிலாளர்கள் சுரண்டப்பட்ட எல்லா வளரும் நாடுகளிலும் இப்போராட்டங்கள் நிகழ்ந்தன. உதாரணமாக வெகு தூரத்தில் இருந்த ஆஸ்திரேலியாவில் கட்டடத் தொழிலாளர்கள் ‘8 மணி நேர வேலை, 8 மணி நேர பொழுதுபோக்கு, 8 மணி நேர ஓய்வு’ என்ற கோரிக்கையை முன் வைத்து 1858 இல் அதை அடைவதில் வெற்றியும் பெற்றனர்.

### எட்டு மணி நேர இயக்கம் அமெரிக்காவில் ஆரம்பம்

1884 இல் அமெரிக்காவில் 8 மணி நேர இயக்கத்தின் போது வெடித்த போராட்டங்கள்தான் மே தினம் உருவாவதற்கு நேரடியான காரணமாய் அமைந்தன. ஆனாலும் இதற்கு ஒரு தலைமுறை முன்பே ‘தேசிய தொழிற்சங்கம்’ குறைந்த வேலை நேரத்துக்கான கோரிக்கையை முன்வைத்து பரந்த இயக்கத்தையே நடத்தியது. ‘தேசிய தொழிற் சங்கம்’ அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் போர்க்குணமிக்க ஸ்தாபனமாக அப்போது விளங்கியது.

1886 மே முதல் நாள் முதல் சட்டபூர்வமான வேலைநாள் என்பது எட்டு மணி நேரம்தான் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா மற்றும் தொழில் அமைப்புகளின் கூட்டமைப்பு தீர்மானிக்கிறது. எனவே எல்லா தொழிலாளர் அமைப்புகளும் தங்கள் அதிகார வரம்பிற்குரிய இடத்தில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் இத்தீர்மானத்திற்கு ஏற்ப தங்கள் சங்க விதிகளை அமைத்துக் கொள்ளுமாறு இம்மாநாடு பரிந்துரைக்கிறது என்று கூறப்பட்டது.

எட்டு மணி நேர வேலை நேரத்தை எப்படி கொண்டு வருவது என்பது பற்றி கூட்டமைப்பு தீர்மானத்தில் ஏதும் சொல்லப்படவில்லை. இதன் உறுப்பினர்களின் எண்ணிக்கை 50,000இற்கு உட்பட்டது. தங்கள் உறுப்பினர்கள் வேலை செய்யும் கடை, ஆலை, சுரங்கங்களில் போராடி இன்னும் அதிகமான தொழிலாளர்களைத் திரட்ட வேண்டும் என்பதை அது அறிந்திருந்தது. அப்போதுதான் எட்டு மணி நேர வேலை நாளை சட்டபூர்வமாக்க வேண்டும் என்பதை அறிவிக்க முடியும் என்பதையும் உணர்ந்திருந்தது. 1886, மே முதல் நாள் 8 மணி நேர வேலைக்காக போராடும் தொழிலாளர்களுக்கு உதவும் பொருட்டே தீர்மானத்திற்கேற்ப சங்க விதிகள் அமைய வேண்டும் என அறிவித்திருந்தது.

வேலை நிறுத்தத்தின் போது வெகு நாள்கள் வெளியே தங்க நேரிடலாம். அப்போது சங்கத்தின் உதவி தேவைப்படும். மேலும் இவ்வேலை நிறுத்தம் தேசிய அளவில் நடைபெறுவதாலும் இணைக்கப்பட்டுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் அமைப்புகளும் கலந்து கொள்வதாலும் அவர்கள் விதிப்படி தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு தங்கள் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமாகிறது. இங்கு ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். இந்த கூட்டமைப்பானது தற்போது உள்ள அமெரிக்க தொழிலாளர் கூட்டமைப்பை போலவே சுயேச்சையாக கூட்டமைப்பு முறையில் ஏற்பட்டது.

# சுகாதார மேம்பாட்டுக்கு கிராமிய மட்டத்தில் குழு

## வடக்கில் அமைப்பதற்கு தீர்மானம்

கிராம மட்டத்தில் செயற்படும் அரச உத்தியோகத்தர்களையும் கிராம மட்டத்தில் செயற்படும் கிராமியக் குழுக்களையும் இணைத்து கிராமிய மட்ட சுகாதார மேம்பாட்டுக் குழுவை உருவாக்குவதற்கான சுற்றறிக்கையை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது

இந்தக் குழு மூலம் கொரோனா கட்டுப்பாட்டுத் தடுப்பு நடவடிக்கைகள், பொதுமக்களுக்கான நிவாரண நடவடிக்கைகள், வீட்டுத் தோட்டத்தை ஊக்குவித்தல், வீட்டுத் தோட்டப் பயிர்களை சந்தைப்படுத்தல், கிராமத்தில் உள்ள கொரோனா தொற்றாளர்கள் சந்தேக நபர்கள் நுழையும் போது உரிய அதிகாரிகளுக்கு விரைந்து அறிக்கையிடல், சுய தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்குக் கிராம மட்டத்தில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுத்தல், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவுதல், போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த அதிகாரிகளுக்கு உதவுதல், மலசலகூடம் குடிநீர் வசதி இல்லாத குடும்பங்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல், பொதுமக்களிடையே சமூக இடைவெளி சவர்க்காரமிட்டு கை கழுவுதல் சரியான முறையில் முகக்கவசம் அணிதல் ஆகிய சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் குழுவின் மேற்பார்வையாளர்களாக பிரதேச செயலர் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோர் செயற்படுவர்

இது குறித்து வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்ட அரச அதிகாரிகளுக்கும் வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தால் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது





படம் 1



படம் 2



படம் 3

# தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

**இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு- 'பழக் கூடை'**

**படம் 1**
டி. ஹரிஸ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

**படம் 2**
அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

**படம் 3**
கணநாதன் கபினயன் - தரம் 6
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் 'பழக் கூடை' எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பி யிருந்தனர்.

தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

எஸ். சிவசாகித்தியன் - தரம் 7
யா/ மகாஜனாக் கல்லூரி

பா. தனுஷன் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

இ. கார்த்திகன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ. ரோஷித் - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

டி. அபிலாஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ஜி. பவித்திரன் - தரம் 8
யா/ ஹாட்லிக் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/ மாணிக்கவாசகர்
வித்தியாலயம், கரவெட்டி

செந்தூரன் அக்ஷயா - தரம் 6
யா/ மெதடிஸ்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை

எம். எஸ். அஸ்யாத் அகமட் - தரம் 2
பு/ மதவாக்குளம் முஸ்லிம் மகா வித்தியாலயம்

திலகராஜ் திலக்சயன் - தரம் 5
உடுவில் மகளிர் கல்லூரி

சுபானந்தன் அஷ்வின் - தரம் 2
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்

ஜி. எட்ரிக் சேம்சன் லியோன் - தரம் 7
சென். சேவியர் ஆண்கள் கல்லூரி, மன்னார்

வி. தனிஸ்ரன் - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

வி. சலோமி - தரம் 6
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

லீனா பர்ஹான்
கிட்ஸ்வே ஆரம்பப் பாடசாலை, கல்கமுவ

எவ். ஸுமையா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

எம். எவ். எவ். ஸுஹைரா - தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

அறிவுச்செல்வன் அறிவுஆதித்தன் - தரம்9
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பி. பார்கவி - தரம் 6
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

எம். சி. ஜோசுவா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

யு. நிலக்ஷா - தரம் 6
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

டேவிட்ராஜ் பிலெஸ்ஷின் - தரம் 5
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சிவகலை - தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய
வித்தியாலயம்

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

இ. பவிஷான் - தரம் 3
யா/ வதிரி வடக்கு மெமி. அ. த. க. பாடசாலை

பரணீதரன் லதுசன் - தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

சி. சுகர்மன் - தரம் 6
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்

பரணீதரன் பிவிசன் - தரம் 2
யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா
வித்தியாலயம்

பா. வாஹினி - தரம் 4
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

மயூதரன் மதுசன் - தரம் 6
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

ஆதிரை அகிலன் - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

றொபின்சன் ஷெர்வின் - தரம் 4
பம்பலப்பிட்டி சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

டி. அபிவர்னி - தரம் 6
சென் ஆன்ஸ் மகளிர் மகா வித்தியாலயம்

காலைக்கதிர் Kalaikathir

## கைபேசி

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு



தினம் ஒரு தலைப்பு

## சித்திரப்போட்டி

**இன்று (01/05/2020) தலைப்பு கைப்பேசி**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

# நாடாளுமன்றை மீண்டும் கூட்டினால் எம்.பிகளுக்கும் கொரோனா பரவுமாம்

## ஆளும் கட்சி இப்படிக் கூறுகின்றது

கொழும்பு,மே 01

எதிர்கட்சி உறுப்பினர்கள் கூறுகின்றபடி கலைக்கப் பட்டுள்ள நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டினால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் உள்ளதாக ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தைக் கூட்டு மாறு கோரும் எதிரணி உறுப்பினர்களை முதலில் தனிமைப்படுத்தலில் வைக்க வேண்டும் என்ற பரிந்து ரையை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ரோஹித்த அபேகுணவர்தன முன்வைத்துள்ளார்.

கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை நாட்டின் தற்போதைய கொரோனா அச்சுறுத்தல் நெருக்கடியைத் தீர்ப்பதற்காக மீண்டும் கூட்டி முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றும்படி ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசிய கூட்டமைப்பு உட்பட எதிர்கட்சியினர் அனைவரும் கூட்டாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எனினும் இந்தக் கோரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ச்சியாக நிராகரித்து வரு கின்றார்.

முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர செவ்வா யன்று ஜனாதிபதிக்குக் கடிதமொன்றை அனுப்பியிருந் தமையுடன், நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஜனாதிபதியினால் அரச நிதியை மேலதிகமாகப் பயன் படுத்த முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பை மீறி ஜனாதிபதி செயற்படுவாராக இருந்தால் அவரது குடியுரிமை குறைந்தது 5 வருடங் களாவது நீக்கப்படும் என்றும், சொத்துக்கள் முடக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர் மங்கள, ஆகவே உடனடியாக நாடாளுமன்றத்தை அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தரும் முன் னாள் அமைச்சருமான ரோஹித்த அபேகுண வர்தன நாடாளுமன்றத்தை மீளக் கூட்டினால் மக்கள் பிரதிநிதிகளிடையே வைரஸ் பரவும் ஆபத்து ஏற்படும் என்று தெரிவித்தார்.

இது தொடர்பில் பேசிய அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன,

நாட்டில் ஏற்பட்டிருக்கும் கொரோனா வைரஸ் அச் சுறுத்தலுக்கு மத்தியில் அரசாங்கம் நடத்தும் அனைத்து முயற்சிகளுக்கும் எதிர்க்கட்சி முட்டுக் கட்டை இடுவதை அவதானிக்க முடிகின்றது. முன் னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர, 5 வருடங்க ளாக நல்லாட்சி அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்த, அதே அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப வழி செய்த மங்கள சமரவீர், ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அண்மையில் அனுப்பியிருந் தார்.

கடிதத்தின் சில இடங்களில் அச்சுறுத்தல்கள் சிலவற் றையும் இணைத்துள்ளார். நிதிக் கையாள்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும், ஆகவே உடனடியாக நாடாளுமன்றத்தை அழைக்க வேண்டும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்திற்காக பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு அழைத்தல், தேர்தலுக்கான திகதி குறித்தல் என்பன இடம்பெற்றிருக்கும் நிலையில், அரசியலமைப்பு அதிகாரத்திற்கு உட்பட்டு கொரோனா வைரஸை ஒழிக்கும் செயற்பாட்டில் ஜனாதிபதி செயலாற் றிவருகின்றார். இப்படியிருக்கும் நிலையில் மங்கள சமரவீர நாட்டை நிலைகுலையச் செய்யும் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அரசமைப்பினை மீறுகின்ற நபர்களின் சொத்துக் களை முடக்கவும், சம்பந்தப்பட்ட நபரது குடியுரிமை யை 5 வருடங்களுக்கு இரத்து செய்யவும் முடியும் என்றும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த 5 வருடங்களாக நல்லாட்சியின் கீழ் மங்கள சமரவீர உள்ளிட்டவர்கள் செய்த செயற்பாட்டினை சரி யாக விசாரணை செய்தால் - சட்டம் கடமையை செய் தால் - அவர்களின் சொத்துக்களே முடக்கப்படும், அவர்க ளின் குடியுரிமையே பறிக்கப்படும்.

கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட முடியும் என்பது அரசமைப்பில் எந்த இடத்தில் இருக்கிறது என்பதை மங்கள சமரவீரவினால் சுட்டிக்காட்டி நிரூ பிக்க முடியுமா?

சாதாரணமாக நாட்டின் சுகாதாரத்துறையினரின்



பரிந்துரைக்கு அமைய சமூக இடைவெளி குறிப்பாக ஒரு மீற்றர் தூரத்தை பேணும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படியிருக்கின்ற நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு மங்கள சமரவீர கோருகிறார்.

அவர் கூறுகின்றபடி நாடாளுமன்றத்தைக் கூட்டி னால் எவ்வாறு 225 உறுப்பினர்களும் சமூக இடை வெளியைப் பேணுவார்கள் என்பது குழப்பம்தான். அதேபோல ஒருவருக்கு கொரோனா ஏற்பட்டாலும் அனைவரிடத்திலும் அது பரவிவிடும்.

எனவே முதலில் எதிர்கட்சி உறுப்பினர்களையே தனிமைப்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் முழு நாடுமே சுத்திகரிக்கப்படும்.

அதேபோல வெளிநாட்டு நிதிகள் அரசாங்கத்திற்குக் கிடைத்திருப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கூறுகின்றார். அவர் கூறுகின்றபடி நிதி கள் கிடைத்திருந்தால் ஊடகங்களுக்கு முன்பாக பகிரங்க விவாதத்திற்கு என்னுடன் மோதி அவற்றை நிரூபிக்கும் படி சவால் விடுக்கின்றேன். - என்றார்.

# தொற்றாளர்களில் 14 நபர்கள் போதைக்கு அடிமையானவர்கள்

கொரோனா தொற்று அபாயமுள்ள 31 பிரதேசங்கள் அடையாளம் காணப்பட்டபோதும், அவற்றில் 4 இடங் களை தவிர்ந்த ஏனைய இடங்களில் கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக டி.ஐ.ஜி. அஜித் றோஹண தெரிவித்தார். இதுவரை பதிவாகியுள்ள கொரோனா தொற்றாளர்க ளில் 14 பேர் போதைக்கு அடிமையான வர்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

ஜா-எல, சுதுவெல பகுதியில் அடையாளம் காணப்பட்ட ஒருவர் மூலம் நாகலகம் வித்யாலய பகுதி மற்றும் குண சிங்கபுர, வாழைத்தோட்ட பகுதிகளுக்கு கொரோனா பரவியதாகத் தெரிவித்தார்.

இதனால் தோட்டங்கள் மற்றும் குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

அடையாளம் தெரியாத நபர்கள் தங்கள் தோட்டங்க ளிலும், அடுக்குமாடி குடியிருப்புகளிலும் தங்க அனுமதி க்கக் கூடாது என்றும், அத்தகைய நபர்களின் நடவடிக்கை கள் பற்றி அருகிலுள்ள காவல்துறை அல்லது சுகாதார அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். போதைப் பழக்கத்திற்காக தங்கு வதற்கு அனுமதிக் கப்பட்ட எந்தவொரு நபரும் தனிமைப் படுத்தல் சட்டம், குற்றவியல் சட்டத்தின் படி தண்டிக்கப் படுவார்கள் என்றார் அவர்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை


20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் — இல. 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல. 30, இந்துக்கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2020 வெளியிடப்பெற்றது.